www.panmugam.com

# பன்முகம்.com

நவம்பர் - 2025 மலர்-1 இதழ்-12

Secret
## நடந்தது என்ன?
புதிய தொடர்

24 மணிநேரமும் கேளுங்கள்
தமிழ்நாடு fm.com

விருப்ப சந்தா ரூ.50 செலுத்த ஸ்கேன் செய்யவும்
MS PADMA MEDIA HOUSE



## மறக்கமுடியுமா..?
# வாடகை சைக்கிள்

# பன்முகம்

www.panmugam.com

மலர்-1 இதழ்-12 .com




## உங்கள் படைப்புகளை அனுப்பிவிட்டீர்களா?

## நவம்பர் 2025

## பன்முகம் பல்சுவை மாத இதழ்

| | | |
|---|---|---|
| கவிதைகள் | 15 வரிகளுக்கு மிகாமல் | சிறந்த 3 கவிதைகளுக்கு தலா ரூ100 பரிசு |
| சிறுகதைகள் | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | சிறந்த கதைக்கு ரூ500 பரிசு. |
| கேள்விகள் | எதைப் பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம். | சிறந்த கேள்விக்கு ரூ100 பரிசு. |
| கட்டுரை | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| திரை அனுபவம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| நூல் அறிமுகம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |

அனுப்பவேண்டிய முகவரி

tamilnaduepaper@gmail.com

கடைசிநாள்

**20.11.2025**

தொடர்புக்கு

**9337501889**

**படைப்புகளை அனுப்பும்போது உங்கள் பெயரையும், அலைபேசி எண்ணையும் தவறாமல் படைப்புக்குக் கீழ் குறிப்பிடவும்**

**அச்சு இதழ் ஆண்டு சந்தா Rs.800**

**மின்னிதழ் ஆண்டு சந்தா Rs.300**

**G-pay 9337501889**

## அலர்ஜி, கேன்சர்,
## இருதய கோளாறுகளை சரியாக்கும்

# வறட்டி வீடு





ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வீட்டுச்சுவரின் வெளிப்புறத்தில் வறட்டி காய வைக்கும் பழக்கும் தமிழகம் முழுவதும் கிராமப் புறங்களில் காணப்பட்டதை நாம் அறிவோம். அது ஏன்?

அதற்கு முக்கிய காரணம், வறட்டிகளால் சூழப்பட்ட சுவர்கள் வெளியில் எந்த தட்பவெப்ப நிலை இருந்தாலும் சரியாக 28.35°C வெப்ப நிலையை வீட்டிற்குள் வழங்கும். இந்த விஞ்ஞான உண்மை உங்களை திகைக்க வைக்கலாம்.

அப்போதெல்லாம் தடுப்பூசியோ மருந்து மாத்தி ரையோ தமிழகத்தில் இல்லை. காரணம் பசு வறட் டியில் உள்ளது. நாட்டு மாடுகளின் A2 சாணம் என்பது ஒரு மிகச்சிறந்த கிருமி நாசினி என்பது அறிவியல்.



18 மாதங்கள் நிரம்பிய ஒவ்வொரு பசுவின் சாணமும் ஆயிரம் தடுப்பூசிக்கு சமம். அப்படியான சாணத்தை தனித்தனியாக ஒவ்வொருவர் முகத்திலும் தனித்தனியாக அடிக்க முடியாது என்பதால் வீட்டுச்சுவற்றில் அடித்து வந்தனர்.

இதன் மூலம் முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட ஒரு Safe Zoneல் நம் தாத்தா பாட்டி காலம் வரை வாழ்ந்தார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

அதுபோல, வளி மண்டலத்தில் இருந்து வரும் புற ஊதா கதிர்கள் மற்றும் காஸ்மிக் கதிர்கள் இந்த நன்கு காய்ந்த வறட்டியில் படும்போது, மின்காந்த சக்தி உந்தப்பட்டு அந்த வீடே அணுக்கதிர்கள் கூட துளைக்க முடியாத ஒரு எஃகு அரணாக மாறிப்போகும். ஆனால் இதன் பலன் 15 நாட்களுக்கு மட்டுமே. இதனாலேயே சோழர்களின் கோட்டையை ஆங்கிலேயர்களால் வீழ்த்த முடியவில்லை என்பது தனிக்கதை.



மேலும், இம்மாதிரியான வறட்டி தட்டும் பழக்கம் கைகள் மூலமாக உடலில் ஏற்படும் கெட்ட கொழுப்புகளை அகற்றி சர்க்கரை நோயை கட்டுக்குள் இருக்க வைத்தது. சுற்றிலும் வறட்டிகளை கொண்ட வீடுகளில் 48 நாட்கள் புழங்கி வந்தால் அலர்ஜி, கேன்சர், இருதய கோளாறு போன்றவை சரியாகும் என சித்தர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலைநாட்டினர் அவற்றின் மகிமையைப் புரிந்துக்கொண்டுதான் தற்போது வறட்டியை அதிக அளவில் தங்கள் வீடுகளில் சேமித்து வைக்கின்றனர்.

வறட்டி தயாரிக்கும் முறைக்கு காப் புரிமையும் பெற்றுள்ளனர்.



ஆனால் நாமோ, பகுத்தறிவு என்று நாம் நமது முன்னோரின் சம்பிரதாயங்களில் இருக்கும் விஞ்ஞான அறிவைப் புரிந்துகொள்ளாமல் கேலிசெய்து கேவலப்படுத்துகிறோம்.

நம் முன்னோர் ஒன்றும் முட்டாள்கள் இல்லை..!

இப்போது நாம் பேசும் பகுத்தறிவு அவர்களின் கால்தூசுக்கு ஈடாகாது..!

நம் முன்னோரின் பழக்கவழக்கங்களை நம்மால் நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும் பரவாயில்லை...

அவற்றைக் கேலி செய்யாமல் இருந்தாலே போதும்..

**- லால்குடி வெ நாராயணன்**





# வாசல் படிகளில் ஏன் உட்காரக் கூடாது?

## குலதெய்வம் வாசம் செய்யும் நிலைவாசல்

வாசற்படியில் உட்காராதே, நிற்காதே என நம் பெரியவர்கள் சொல்லி கேட்டிருக்கிறோம். முன்னோர்கள் எதையும் சும்மா சொல்லிவிடவில்லை!

இது ஏன் என கேட்டால் பலருக்கு விளக்கங்கள் கிடைக்காது.

உட்கார கூடாதுன்னா உட்காரக் கூடாதுதான் என்று பதில் வரும்.

இது எதற்காக என்ற காரணத்தை பார்க்கலாம். தலைவாசல் கதவில் குலதெய்வம் வாசம் செய்வதாக ஐதீகம்.

ஒரு வீட்டின் தலைவாசலில் அஷ்டலஷ்மியும் வாசம் செய்வது போல, தலைவாசல் கதவில் குலதெய்வம் குடியிருப்பதாக சாஸ்திரங்கள் கூறப்படுகிறது.

உங்களுடைய குலதெய்வம் உங்கள் வீட்டின் கதவில் தான் குடியிருக்கும்.



அதனால் தான் நம் முன்னோர்கள் வீட்டின் கதவை சத்தமில்லாமல் திறக்கவும், மூடவும் கூறுவார்கள்.

அடிக்கடி எண்ணெய் விட்டு சுலபமாக மூடும்படி வைத்திருப்பார்கள்.

குழந்தைகள் கதவின் தாழ்ப்பாளை ஆட்டும் பொழுது பெரியவர்கள் அதட்டுவதை நாம் கேட்டிருப்போம்.

வீட்டின் தலை வாசலில் இருபுறங்களிலும் விளக்கு ஏற்றி வைப்பது பண்டைய கால வழக்கமாக நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

அந்த இரண்டு புறங்களிலும் கும்ப தேவதைகள் அமர்ந்திருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அந்த தேவதைகளை குளிர்விக்கவே அப் பகுதியில் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது.

அவர்களை வணங்குவதற்காகவே வீட்டின் தலைவாசலை குள்ளமாக வடிவமைத்து வைத் திருப்பார்கள்.

அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் வீட்டிற்குள் நுழையும் முன் கும்ப தேவதைகளை வணங்கி செல்லுவதற்கு தான் இவ்வாறு உயரம் குறை வாக முந்தைய காலங்களில் கதவுகள் வடிவமைக் கப்பட்டன.

அது போல எப்படி நம் கோயில்களில் வாசல் படியை மிதிக்காமல் தாண்டி உள்ளே செல்கி றோமோ அதே போல் தான் வீடு என்னும் கோவிலில் வாசல் படிகளை தாண்டி உள்ளே செல்லவேண்டும்.

நம் வீட்டின் நிலைவாசல் படிகளுக்கு மஞ்சள், குங்குமம் இட்டு வழிபடுவதும் இந்த தேவதை களுக்கு தான்.

அத்தகைய தெய்வீக சக்தி வாய்ந்த இந்த நிலைவாசல் படியை மிதித்துக் கொண்டு உள்ளே செல்லக் கூடாது.

அது போல் ஒருபோதும் நிலவாசல் படியில் அமரக் கூடாது.

வீட்டின் தலை வாசலில் மகாலட்சுமி களும், கதவில் குலதெய்வமும் வாசம் செய்வதால் அந்த இடத்தில் தலை வைத்து படுக்கக் கூடாது, தரித்திரம் ஏற்படுத்தும் என்பார்கள்.

அது போல் தலைவாசலில் கால் வைத்து நிற்கக் கூடாது.

அங்கு நின்று தும்முவது, தலை வாருவது போன்றவற்றை செய்தால் வீட்டில் தரித்திரம் தான் உண்டாகும்.

இது போன்ற சில தவறுகளை வீட்டில் செய்தால் பணவரவு கட்டாயம் தடைபடும். வீட்டின் உள்ளவர்களுக்கு மன நிம்மதி கெடும்.



கெட்ட சக்திகளும் உள்ளே நுழைவதற்கு வசதியாக அமைந்து விடும்.

கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவர் நம்முடைய குலதெய்வம் தான்.

அதனால் தான் எப்போதும் நம் வீட்டின் கதவுகளில் குடியிருப்பதாக சாஸ்திரங்கள் கூறு கின்றன.

சில சமயங்களில் நமக்கு தெரியாமல் நாம் சில நேரங்களில் நமக்கு வரும் ஆபத்துக்கள் விலகியதை அடுத்து தலைக்கு வந்தது தலைப் பாகையோடு சென்று விட்டது என்று கூறுவோம்.

நம்முடைய பல கஷ்டங்களில் இருந்து குலதெய் வம் நம் துணையாக இருந்து பாதுகாப்பதாக ஆன்மீக சாஸ்திரங் கள் கூறுகின்றன.

எனவே இதுவரை தெரியாமல் செய் திருந்தாலும், இனியும் தலைவாசலில் இந்த தவறுகளை நாம் செய்யாமல் இருப்பது தான் மிகவும் நல்லது.

நமது வீட்டின் தலைவாசல் என்ற நிலைவாசல் படியில் மஞ்சள் குங்குமம் இட்டு மாலை நேரங்களில் விளக்கு வைத்து வழிபடுவோம்..

– எம் அசோக்ராஜா

# ஒட்டகச் சிவிங்கியும் அதிசயங்களும்

காட்டின் மிக உயர்ந்த ஒட்டகச் சிவிங்கி ஓர் ஆச்சரியந்தான். கழுத்தைத் திருப்பாமல் எந்தவிலங்காலும் மனிதனாலும் திரும்பிப் பார்க்கவே முடியாது. ஆனால் இந்த மிருகமோ தன் கண்களை பின்னால் திருப்பி, தனக்குப் பின்னால் நடப்பதை அறிந்துகொள்கின்றது. கழுத்து திருப்பப்படுவதில்லை.

அக்காசியா (acacia) என்ற ஆபிரிக்க காடுகளுக்குரிய உயர்ந்த மரத்தின் இலைகளை இது விரும்பி உண்கின்றது. 3அங்குல நீளமான முட்கள் கிளைகளில் துருத்திக் கொண்டிருக்க, தன் நீண்ட நாக்கால்50செ.மீ (20அங்குலம்), இந்த இலைகளை, இந்த மிருகம் எப்படி உண்கின்றது என்பது வியப்பான விடயந்தான். அந்த அளவுக்கு தடித்த நாக்கு ! நாக்கின் நிறம் நீல வண்ணத்தில் இருக்கும். தழைகளை சுற்றி வளைத்து உண்ணவும், மூக்கைச் சுத்தப்படுத்தவும், .இந்த நீளமான நாக்கு உதவுகின்றது.

காலின் நீளம் ஆறு அடி (182செ.மீ)... குறுக்கு வாட்டாக பாதத்தின் நீளம் ஒரு அடி(30செ.மீ)... பின்னங் கால்களை விட முன்னங் கால்கள் பத்து சதவிகிதம் நீளமானவை. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்குள்ளும் 15 அடிகள்(457செ.மீ) உள்ளடக்கம். ஒரு மணி நேரத்துக்குப் பத்து மைல் தூரத்தை ஒட்டகச் சிவிங்கிகளால் கடக்க முடியும்...

மனிதர்களைப் போலவே 7கழுத்து எலும்புகளைக் கொண்டவை இந்த மிருகங்கள்...இவை 4.3 மீட்டர் முதல் 5.7மீட்டர் வரை(14.1 முதல் 18.7அடி) உயரம் வரை வளரக்கூடியவை. இதனுடைய கழுத்தின் நீளம் ஆறு அடி.. ஒரு வளர்ந்த மிருகத்தின் எடை சுமாராக 828கிலோ முதல் 1182 கிலோ வரை வரை இருக்கும். இதயத்தின் எடை 10கி.கிராம்.

பத்து மாதங்கள் கருவிலிருந்து வெளியே வந்து உலகத்தைப் பார்த்தவர்கள் நாம். ஆனால் இந்த மிருகத்திற்கோ 14முதல் 15மாதம் கர்ப்ப காலமாகின்றது.குட்டிகள்1.8மீற்றர் உயரமுடையவை என்பது பேராச்சரியம். இதில் விந்தை என்னவென்றால், நின்றபடி குட்டியை ஈன்று விடுகின்றன தாய் மிருகங்கள். பொத்தென தரையில் விழும் குட்டி. இது விழுந்த அதிர்ச்சியிலிருந்து மீள முன்பு, தாய் சிவிங்கி தன் கால்களால் குட்டியை எட்டி உதைக்க ஆரம்பிக்கும். இந்தத் தாய்க்கு நெஞ்சிலே ஈரம் இல்லையா என்று எங்கோ ஒரு குரல் கேட்கிறது. ஆனால் குட்டி தன்னைச் சுதாரித்துக் கொண்டு, சீக்கிரம் எழுந்து



விடவேண்டும் என்பதற்காகவே, தாய் இப்படி உதைக்கின்றது. குட்டி சீக்கிரம் எழு ம்பவில்லை என்றால் காத்து நிற்கும் கழுதைப் புலிக்கோ, சிங்கத்திற்கோ “டிபனாகி” விடும். பிறந்து சில மணி நேரங்களில் குட்டிகள் ஓடக்கூடியவை.

சிவிங்கியின் உதை என்றால் சாதாரணமான தல்ல. இது முறையாக ஓங்கி ஓர் உதை கொடுத்தால், காட்டுராஜாவான சிங்கமே அவுட்! பெரும்பாலும் அதிகாலையிலே இலைகுழை களை, பழங்களை, பூக்களை, படரும் தாவரங் களை உண்ண விரும்பும் ஒரு ஒட்டகச் சிவிங்கி, தினமும் சுமாராக 30 கிலோ உணவை உட் கொள்கின்றது.

பெயரில் ஒற்றுமை இருப்பதுபோல, ஒட்டகத் தைப் போல, அடிக்கடி நீர் அருந்தாத மிருகம் இது. ஒரு வாரம் நீர் அருந்தாமல் தாக்குப் பிடிக் கும் வல்லமை இதற்குண்டு. ஆப்ரிக்காவின் புல்வெளிகளில் அலைந்து திரியும் ஒட்டகச் சிவிங்கிகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவை அல்ல, அவை நான்கு இனங்களைச் சேர்ந்தவை என புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒட்டகச் சிவிங்கியின் வாலில் உள்ள ரோமம் மனிதர்களின் தலைமுடியைவிட 10 மடங்கு அடர்த்தியானது.ஒட்டகச் சிவிங்கியின் தோலில் உள்ள திட்டுகள் நமது கைரேகைகளைப் போலவே இருக்கும். ஒரு ஒட்டகச் சிவிங்கியின் திட்டுகளும் இன்னொரு சிவிங்கியின் திட்டுகளும் ஒருபோதும் ஒன்றாக இருப்பதில்லை

ஒட்டகச் சிவிங்களில் ஆண், பெண் இரண்டுக்கும் கொம்புகள் உண்டு. ஆனால் பெண் ஒட்டகச் சிவிங்கிகளின் கொம்புகள் சிறியது. இவற்றின் கொம்புகள் ரோமத்தால் போர்த்தப்பட்டிருக்கும்.

ஒட்டகச் சிவிங்கிகளுக்கு நான்கு வயிற்று அறைகள் உண்டு. உணவைச் செரிமானம் செய்ய இந்தக் கூடுதல் வயிற்று அறைகள் உதவுகின்றன.கத்த முடியாத மிருகம் இது என்பது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். ஆண்டவன் படைப்பு அப்படி...இதற்கென சொந்தக் குரல் இல்லை. குரல் நாண் (Vocal chord) இருந்தாலும் அதனால் சத்தம் போட்டு கத்த முடியாது.

ஒட்டகச் சிவிங்கிகள் தண்ணீர் பருகும் நேரம்தான் அபாயகரமானது. முன்கால்களை அகலப் பரப்பினால்தான் அவற்றால் கழுத்தைக் குனிய முடியும். கழுத்தைச் சாய்த்து நீரைப் பருகும்போது அவற்றால் தங்களைத் தாக்கவரும் விலங்குகளைப் பார்க்க முடியாது.



# ஆட்டுக்கால் சூப்

தன் மனைவியின் பெற்றோர் வசிக்கும் சிவகிரி கிராமத்தில் நடைபெறும் திருவிழாவிற்காக மனைவி கங்காவையும், மகன் விஷாலையும், அழைத்துக் கொண்டு நான்கு நாட்கள் முன்னதாகவே வந்திருந்தார் சுகுமார்.

வந்த இரண்டாம் நாள் வழக்கம் போல் கங்காவிற்கு நெஞ்சு சளி கட்டிக் கொள்ள மூச்சு விடவும் முடியாமல், ஓங்கி இருமவும் முடியாமல் தவித்தாள் அவள்.

"அத்தை இப்படித்தான் மூன்று மாசத்துக்கு ஒரு தடவை இவளுக்கு இப்படி நெஞ்சு சளி கட்டிக்கும்... அப்ப ஒரு வேலை செய்வேன்.. அவ்வளவுதான் பத்தே நிமிஷத்தில் நார்மல் ஆயிடுவா" என்றார் சுகுமார் தெ மாமியாரிடம்.

"அது என்ன?ன்னு சொல்லுங்க மாப்பிள்ளை.. உடனே பண்ணிடுவோம்" கங்காவின் தாய் சொல்ல.

ஒரு சிறிய தயக்கத்திற்குப் பின் "வந்து "சுர்"ருன்னு ஆட்டுக்கால் சூப் வெச்சு ஒரு டம்ளர் குடிச்சாப் போதும் எல்லாம் சரியாயிடும்! என்றார் சுகுமார்.

பொங்கி எழுந்தாள் மாமியார். "என்ன... என்ன பேசுறீங்க மாப்பிள்ளை?... திருவிழாவுக்காக காப்புக் கட்டிய நாளிலிருந்து இந்த ஊர்ல எந்த வீட்டிலும் அசைவம் சமைச்சதில்லை... சமைக்கவும் கூடாது!... அது ஊர்க் கட்டுப்பாடு!... மீறினால் தெய்வகுத்தம் ஆயிடும்!... திருவிழாவே நடக்காது... விபரீதமாயிடும்"

"ஓ... அப்படியா?... சரி... சரி... நான் போய் ஒரு இருமல் டானிக் வாங்கிட்டு வர்றேன்" சொல்லி விட்டு வெளியேறிய சுகுமார் பஸ் பிடித்து பக்கத்து ஊருக்குச் சென்று ரகசியமாய் ஆட்டுக்கால் சூப் வாங்கி வந்தார்.

நேரே தன்



மாமியாரிடம் அதைக் கொடுத்து "இதை அவளோட கட்டிலுக்கு அருகில் வெச்சிடுங்க... இருமல் வரும் போதெல்லாம் எடுத்து ஒரு மடக்கு குடிக்கச் சொல்லுங்க... இருமல் சரியாயிடும்!... இதப் பாருங்க நீங்க அதை திறக்கவும் வேண்டாம்.. கங்காவுக்கு ஊட்டவும் வேண்டாம்!... அவளே எந்திரிச்சுக் குடிச்சுக்குவா".

"சரிங்க மாப்ள"

மறுநாள் காலை சந்தோசமாய் கண் விழித்தாள் கங்கா. அவள் நெஞ்சை அடைத்துக் கொண்டிருந்த சளி காணாமலே போனது.

அறையை விட்டு வெளியே வந்த கங்காவைப் பார்த்து வீட்டிலுள்ள அனைவருமே "அப்பாடா" என்று நிம்மதியாயினர்.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார் சுகுமார்.

மூன்று தினங்களுக்குப் பிறகு, ஊர்த் திருவிழாவெல்லாம் நல்ல விதமாக முடிந்ததும் மனைவி குழந்தையோடு தன் ஊருக்கு புறப்பட்ட சுகுமார், போகிற போக்கில் தன் மாமியாரை அழைத்து, "என்னமோ கோவில்ல திருவிழா சாட்டி இருக்கு... அசைவம் சாப்பிட்டா தெய்வகுத்தம் ஆயிடும்... விபரீதமாயிடும்...ன்னு சொன்னிங்க ஒண்ணுமே ஆகலை பார்த்தீங்களா?" என்றார்.

"அதான் நாம அசைவம் எதையுமே செய்யலையே!". அப்பாவியாய் சொன்னாள் மாமியார்.

"அப்படின்னு நீங்க நினைச்சிட்டிருக்கீங்க... கங்காவுக்கு நான் வாங்கிட்டு வந்து கொடுத்தது டானிக் அல்ல... ஆட்டுக்கால் சூப்பு" என்று சொல்லி விட்டு வெற்றிப் புன்னகையோடு சுகுமார் தன் மனைவி மகனோடு வெளியேற.

"அப்படியே... அதே சந்தோசத்துல ஊருக்குப் போங்க மாப்ள... நீங்க கொடுத்தது ஆட்டுக்கால் சூப்புன்னு எனக்கு தெரியும்... அதனாலதான் அதைக் கீழே கொட்டிட்டு கங்காவுக்கு நான் மிளகுக் கஷாயத்தைக் கொடுத்தேன் என்கிற உண்மை என்னோடவே இருக்கட்டும்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் கங்காவின் தாய்.

– முகில் தினகரன்.
கோயம்புத்தூர்.



# காதல்

நெடிலில் தொடங்கி
மெய்யில் முடியும் மெய்
காதல் !

தன்னை மறந்து
துணையை நினைக்கும்
காதல் !

அனுபவம் இனிமை
நினைத்திட இனிக்கும்
காதல் !

காவியம் தொடங்கி
கணினி வரை இன்பம்
காதல் !

ஒரே அலைவரிசையில்
இரண்டு மனங்கள்
காதல் !

மூளையின் மூலையில்
இட ஒதிக்கீடு
காதல் !

உயிர் உள்ளவரை
ஒட்டியிருக்கும் நினைவு
காதல் !

அகத்தில் தோன்றி
முகத்தில் மலரும்
காதல் !

சிறகுகள் இன்றி
வானில் பறக்கலாம்
காதல் !

சிந்தைக்கு வழங்கிடும்
புதுத்தெம்பு
காதல் !

கர்வம் தந்து
கர்வம் தகர்க்கும்
காதல் !

விழிகளில் தொடங்கி
மூளையில் முடியும்
காதல் !

ஈடு இணையற்றது
இணையோடு இணைப்பது
காதல் !

வென்றால் இன்பம்
தோற்றால் துன்பம்
காதல் !

– கவிஞர் இரா .இரவி



# Secret நடந்தது என்ன?

பாகம் 01

■ நிரஞ்சனா நெப்போலியன்

அந்த மழைக்கால இரவின் இருள், தமிழகத்தின் தலைநகரை மொத்தமாய் விழுங்கிக் கொண்டிருந்தது. அதற்கு அடுத்த நாள் அமாவாசை என்பதால், வெள்ளை சட்டை அணிந்து வந்தவர்களைக் கூட, அருகில் வந்தால் தான் பார்க்க முடிந்தது. போதாத குறைக்கு, மழையும் விடாமல் பெய்து கொண்டிருந்தது. ஆனால் இந்தத் தடைகள் எதுவும், தமிழக போலீசாரின் செயல் வேகத்தை இம்மியளவும் குறைக்கவில்லை. மழை கோட்டை அணிந்து கொண்டு, கொட்டும் மழையில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.




தலைநகரத்தின் இதயம் என்று கருதப்பட்ட அந்த முக்கியமான பகுதியில் அமைந்திருந்த ஒரு கட்டிடத்தைக் காவல்துறையின் வண்டிகள் சூழ்ந்திருந்தன.

அங்கு நடந்த ஒரு கொலையைப் பற்றி அவர்கள் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அது கொலையா, தற்கொலையா என்று அவர்களுக்குச் சரியாக தெரியாவிட்டாலும், அதைக் கொலை என்று தான் அவர்கள் எண்ணினார்கள்.

ஒரு பெண் உயிரோடு எரித்து சாம்பலாக்கப் பட்டிருந்தாள். அக்கம் பக்கத்து வீட்டாருக்கு அதைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. ஏனென்றால், எரியும் பொழுது அந்தப் பெண் குரல் எழுப்பவே இல்லை.

அதனால் அது தற்கொலையாக இருக்க வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தான் ஆய்வாளர் முருகன். ஏனென்றால், தன் உடல் மொத்தமாய் எரிந்து சாம்பலாக்கும் வரை, கத்திக் குரல் எழுப்பாமல் இருக்கும் அளவிற்கு மனோதிடம் வாய்ந்த ஒரு பெண் இந்த உலகில் இருக்கவே முடியாது என்பது அவனது கருத்து.

அவன் எண்ணியதும் சரி தானே? எப்படி ஒரு பெண் சிறு முனங்கல் கூட இல்லாமல் முழுதாய் எரிந்து சாம்பலாக முடியும்? எதார்த்தமாய்

யோசித்தான் முருகன்.

மேலும், இது அவர்கள் பார்க்கும் முதல் மரணம் அல்ல. கடந்த மூன்று மாதத்தில், இதே போன்ற மரணம், ஏற்கனவே இரண்டு முறை நடந்திருந்தது தான் அவன் அப்படி எண்ணியதற்கு காரணம். இது மூன்றாவது மரணம். ஆனால், அது கொலையா, தற்கொலையா என்பது பற்றி ஒரே ஒரு துப்பு கூட அவர்களுக்கு இது வரை கிடைக்கவில்லை. இந்த மரணங்கள் சம்பவித்த அனைத்து பகுதிகளும் மிகவும் பரபரப்பானவை. சென்னை நகரின் பிரசித்தி பெற்றப் பகுதிகள் அவை. மூன்று மரணங்களும் ஒரே விதமாய் நிகழ்ந்தவை. இறந்தவரின் மரண ஓலத்தை யாருமே கேட்கவில்லை. அந்தக் குறிப்பிட்ட பகுதியில், சந்தேகிக்கும் படி யாருமே நுழைய வில்லை. அந்நிய ஆட்களையும் அந்தப் பகுதி மக்கள் பார்க்கவில்லை.



இந்த மரணங்களுக்கு இடையில் இருந்த ஒரே ஒரு ஒற்றுமை, அவர்கள் மூவரும், திருமண மான, வேலைக்குச் செல்லும் பெண்கள் என்பது மட்டும் தான்.

ஆய்வாளர் முருகன், தனது பேனாவின் நுனியால் தனது நெற்றியைத் தட்டிய படி, கண்களை மூடி யோசித்துக் கொண்டிருந்தான்.

இந்த மூன்று மரணமும் நிச்சயம் தற்கொலையாய் இருக்க வாய்ப்பில்லை. ஒருவேளை, அவை கொலைகள் என்றால், இந்தக் கொலைகளைச் செய்வது யார்? எதற்காக செய்கிறார்கள்? முக்கியமாய், ஒரு சிறிய ஆதாரத்தைக் கூட விடாமல் எப்படி செய்கிறார்கள்? இதுவரை ஒரு கைரேகை கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்தக் கொலைகளை எல்லாம் செய்பவன் கைத்தேர்ந்தவனாய் இருக்க வேண்டும். ஆனால், இந்தக் கொலைகளின் பின்னணி என்ன?

தன் கண் முன்னால் அசுரத்தனமாய் வளர்ந்து கொண்டிருக்கும் மிகப்பெரிய சவாலை உணர்ந்து தான் இருந்தான் முருகன். அவனைக் கவலைப்பட வைத்த விஷயம் என்னவென்றால், ஒருவேளை இது கொலைகள் என்றால், அது இத்தோடு முடிந்து விடுமா அல்லது தொடரப்போகிறதா என்பது தான். ஒருவேளை தொடர்ந்தால், அது அவனுக்கு மிகப்பெரிய சவாலாய் இருக்கப் போகிறது.

– தொடரும்...




தினமும் புதிய புதிய
இசை வீடியோக்கள்
ஆன்மிக பாடல்கள்
சுவையான சமையல்
வீடியோக்களை
வெளியிடும்

**dheivamtv.com**

இணையதளத்தை பார்க்கவும்

வாட்சப் மற்றும் தொலைபேசி எண்

**7789941009**



# காத்திருப்பு

ஆசைக்கனவுகளை
நிஜமாக்கும் முயற்சியில்
கற்பூரமாய்க்
கரைகிறது காலம்!

பொறுமை இழந்து
பொங்காமல்
சகிப்புத்தன்மையில்
சளைக்காமல்
உள்ளம் நடத்தும்
உள்ளிருப்பு போராட்டம்!

எதிர்ப்பார்ப்புகள்
ஏக்கங்களாகி
ஏமாற்றம் தரும்போது
சலிப்பாலும் வெறுப்பாலும்
உமிழ்நீரும் கசந்து விடுகிறது!

காதலுக்காகக்
காத்திருப்பது சுகமே
என்றாலும் கற்புக்கு
வாராமல் களவாகவே
நீளும் போது கன்னத்தில்
கைவைக்கும்
கவலை அலைகள்!

இங்கே
குருவும் வரும் வரை
கல்யாணம் காத்திருக்கிறது
தேகபலத்தில் குறைவிருந்தால்
புத்திரபாக்கியம்
காத்திருக்கிறது மக்கள்
பெருக்கத்தால்
வேலைவாய்ப்பு காத்திருக்கிறது!

காலவிருட்சத்தில்
காய்க்கும் கனவுகள்
புகைப்போட்டுக்
கனிவதில்லை
விக்கிரமாதித்தனின்
மாயாஜாலங்களாய்
அதிசயங்களும்
நிகழ்வதில்லை
கட்டாயக்காத்திருப்பு
கடமையாகி விட்டது!



கவிஞர்
த.அனந்தராமன்,
துறையூர்.




ஒரே தரமான நம்பர் 1 நாளிதழ்

தமிழ்நாடு
இ பேப்பர்.காம்

# மீம்ஸ் கலாட்டா


I'm Not Addicted to Phone
KSK-B
I just use it when I have time.
Like, lunch time, dinner time,
this time, that time,
all the time


தூக்கங்களை தூக்கி சென்றாய்..
என்ன மாப்ள காதலா..
காதலா..கொசுக்கடி மாமா..


தேர்ந்தெடுக்கப்பட்ட தேயிலையில் செய்த
தேநீர் போல் இருக்குறீர்கள் தோழி
She:
பன்முகம்

# மரணம் உணர்த்தும் வாழ்க்கைப் பாடம்

உங்கள் இறுதி ஊர்வலத்திற்குப் பின் ஒருசில மணிநேரங்களில் அழுகுரல்கள் முழுமையாக அடங்கியிருக்கும்,

அடுத்த வேளை உணவை அயல் வீட்டுக்காரர் கொண்டுவந்திருப்பார், இல்லை என்றால் ஆர்டர்கள் ஹோட்டலுக்கு சென்றிருக்கும், பேரன் பேத்திகள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்க,..

வந்த கூட்டத்தில் ஓர் இளம்பெண்ணும் ஆணும் காதல் புன்னகையுடன் பரஸ்பரம் போன் நம்பர்கள் மாற்றிக்கொள்வர்...

படுக்கப் போகும் முன் காலாற நடந்து வர லாமென சில ஆண்கள் தேநீர்க்கடை வரை சென்றிருப்பர்,..

சாப்பிட்ட இலைகளயும், குப்பைகளையும் இன்னும் கொஞ்சம் தள்ளிக் கொட்டியிருக்கலாம் என உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் மனதுக்குள் பொறுமிக்கொண்டிருப்பார்,..

ஒரு அவசர சூழ்நிலையால் நேரில் வர இயலவில்லையென உறவினர் ஒருவர் உங்கள் மகளிடம் போனில் பேசுவார்.

மறுநாள் விருந்தில், கறியில் காரம் போதவில்லையென ஓரிருவர் குறைபட்டுக்கொள் வார்கள், எலும்பை நீக்கி, கறியை மட்டும் குழந்தைக்கு ஒரு அம்மா ஊட்டிக்கொண்டிருப்பார்..

இத்தனை தூரம் வந்தாச்சு போற வழியில் அங்கேயும் பார்த்துவிட்டுப் போலாமா என வெளியூர் உறவுகள் சுற்றுலாத் திட்டங்கள் ரகசியாமாய் வகுத்திருப்பர்,

தன்னுடைய பங்குக்கு மேல் சிலநூறு ரூபாய்கள் அதிகமாக செலவாகிவிட்டதென ஒரு பங்காளி கணக்கிட்டு நொந்துகொண்டிருப்பார்..

கூட்டம் மெல்ல மெல்லமாய்க் கரையத் தொடங்கும்..

அடுத்து வரும் நாட்களில் நீங்கள் இறந்ததே தெரியாமல் உங்கள் தொலைபேசிக்கு சில



அழைப்புகள் வரக்கூடும்,..

உங்கள் அலுவலகம் உங்கள் இடத்துக்கு வேறொருவரை அவசரமாகத் தேடத் துவங்கியிருக்கும்,

ஒரு வாரம் கழிந்து, உங்கள் இறப்புச் செய்தி கேள்விப்பட்டு, உங்கள் கடைசிப் பதிவு என்னவென ஆர்வம் கலந்த சோகத்தோடு சில பேஸ்புக் நண்பர்கள் தேடக்கூடும்.

இரண்டு வாரங்களில் உங்கள் மகன் மகளின் எமெர்ஜென்சி லீவு முடிந்து பணிக்கு திரும்பிடுவர்,

ஒரு மாதமுடிவில் உங்கள் வாழ்க்கைத்துணை டிவியில் வரும் ஏதோ ஒரு நகைச்சுவைக் காட்சிக்கு சிரிப்பார்,

அடுத்துவரும் மாதங்களில், உங்கள் நெருங்கிய உறவுகள் மீண்டும் சினிமாவுக்கும், பீச்சுக்கும் சகஜமாய்ச் செல்லத்துவங்கியிருப்பர்,

அத்தனை பேரின் உலகமும் எப்போதும்போல் மிக இயல்பாக இயங்கிக்கொண்டிருக்கும்,

ஒரு பெரிய ஆலமரத்தின் இலை ஒன்று வாடி உதிர்ந்ததற்கும், நீங்கள் வாழ்ந்து மறைந்ததற்கும் எள்ளளவும் வித்தியாசம் இல்லாதது போல, அத்தனையுமே சுலபமாய், வேகமாய், எந்தச் சலனமுமின்றி நடக்கும்,

மழை பெய்யும், தேர்தல் வரும், பேருந்துகளில் கூட்டம் வழக்கம்போலவே இருக்கும், ஒரு நடிகைக்குத் திருமணம் ஆகும், திருவிழா வரும், உலகக்கோப்பை கிரிக்கெட் திட்டமிட்டபடி நடக்கும், வண்ண வண்ணமாய் பூக்கள் பூக்கும், உங்கள் செல்லப்பூனை அடுத்த குட்டி ஈனும்..

நீங்களே வியக்கும் வேகத்தில் இந்த உலகத்தால் நீங்கள் மறக்கப்படுவீர்கள், இதற்கிடையில் உங்கள் முதல்வருடத் திதிகொடுத்தல் மட்டும் மிகச் சிரத்தையாக நடக்கும்.

கண்மூடித் திறக்கும் நொடியில்

வருடங்கள் பல ஓடியிருக்கும், உங்களைப் பற்றிப் பேச யாருக்கும் எதுவுமே இருக்காது, என்றாவது ஒருநாள், பழைய புகைப்படங்களைப் பார்க்கையில் மட்டும், உங்கள் வாரிசுகளில் ஒருவர் உங்களை நினைவுகொள்ளக்கூடும்,

உங்கள் ஊரில், நீங்கள் நெருங்கிப் பழகிய ஆயிரம் ஆயிரம் பேர்களில், யாரோ ஒருவர் மட்டும், நீங்கள் இருந்ததாய், அபூர்வமாய் உங்களைப்பற்றிப் யாரிடமோ பேசக்கூடும்..

மறு பிறவி உண்மையென்றால் மட்டும் நீங்கள் வேறெங்கேயோ, வேறு எவராகவோ வாழ்ந்து கொண்டிருக்கக்கூடும்..

மற்றபடி, நீங்கள் எதுவுமே இல்லாமல் ஆகி, பேரிருளில் மூழ்கி பல பத்தாண்டுகள் ஆகியிருக்கும்,

இப்போது சொல்லுங்கள்.. உங்களைஇத்தனை சீக்கிரம் மறக்கக் காத்திருக்கும் மனிதர்களில் யாரைத் திருப்திப்படுத்த இன்று, இப்போது, இவ்வளவுபதற்றமாய்ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்..?

உங்கள் வாழ்க்கை, யாரையும் நீங்கள் திருப்திபடுத்த தேவையில்லை, யாரும் உங்களை திருப்திபடுத்தபோவதும் இல்லை. வாழுங்கள் உங்களுக்காகவும் வாழுங்கள்.



# பிளாஸ்டிக் கண்ணாடி பாட்டில்

## எது சிறந்தது..?

பிளாஸ்டிக் பாட்டில் மைக்ரோபிளாஸ்டிக் வெளியிடுகிறது, இது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். ஆனால் கண்ணாடி பாட்டில் இதை விட பாதுகாப்பானது என்று நீங்கள் கருதினால், நீங்கள் தவறு செய்கிறீர்கள்.

பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி பாட்டில் இரண்டில் எதைப் பயன்படுத்துவது பாதுகாப்பானது? இதற்கு பதிலளிக்கும் விதமாக, நீங்கள் கண்ணாடி என்ற வார்த்தையை மட்டுமே கேட்பீர்கள். பிளாஸ்டிக் பாட்டில் மைக்ரோபிளாஸ்டிக் வெளியிடுகிறது, இது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். ஆனால் கண்ணாடி பாட்டில் இதை விட பாது காப்பானது என்று நீங்கள் கருதினால், நீங்கள் தவறு செய்கிறீர்கள். உண்மையில், ஒரு ஆய்வின்படி, கண்ணாடி பாட்டில்களும் மைக்ரோபிளாஸ்டிக்கை வெளியிடுகிறது, இது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல என்றும் குறிப்பிடுகிறது. அதைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

கண்ணாடி பாட்டில்களும் மைக்ரோ பிளாஸ் டிக்கை வெளியிடுகின்றன, அவை பாட்டிலில் உள்ள தண்ணீரையும் பொருட்களையும் மாசு படுத்துகின்றன. பிரான்சின் உணவு பாதுகாப்பு நிறுவனமான கிழிஷிணிஷி நடத்திய ஆய்வில் இந்த தகவல் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியின் படி, கண்ணாடி பாட்டில்களில் ஒரு லிட்டர் குளிர் பானம், எலுமிச்சைப் பழம், ஐஸ் டீ மற்றும் பீர் ஆகியவற்றில் சராசரியாக 100 மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் உள்ளன. அதேசமயம், பிளாஸ்டிக் பாட்டில்களில் 50 மடங்கு அதிக மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் உள்ளன.

கண்ணாடி பாட்டில்களில் மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் எவ்வாறு குவிகின்றன?இந்த ஆராய்ச்சி யின் படி, கண்ணாடி பாட்டிலில் காணப்படும் மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் மூடியின் நிறத்துடன் பொருந்தின. அப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்த பிளாஸ்டிக் துகள்களுக்கு மூடியே காரணம். சாதாரண சோடா நீரில் மைக்ரோபிளாஸ்டிக் அளவு மிகவும் குறைவாக இருந்தது. பிளாஸ்டிக் பாட்டிலில் 1.6 மைக்ரோபிளாஸ்டிக் துகள்களும், கண்ணாடி பாட்டில்களில் லிட்டருக்கு சுமார் 4.5 துகள்களும் இருந்தன.

இதற்கு என்ன தீர்வு இருக்க முடியும்? கிழிஷிணிஷி ஆராய்ச்சி இயக்குனர் குய்லூம் டுஃப்லோஸ் இதற்கு ஒரு சாத்தியமான தீர்வை பரிந்துரைத்துள்ளார், அதாவது மூடிகளை நன்கு கழுவி, பயன்படுத்துவதற்கு முன்பு எத்தனால்நீர் கரைசலால் சுத்தம் செய்ய வேண்டும். இந்த வழியில் மைக்ரோபிளாஸ்டிக் துகள்களின் எண் ணிக்கையை கணிசமாகக் குறைக்கலாம். இந்த கரைசலின் மூலம், உணவு மற்றும் பானங்களில் மைக்ரோபிளாஸ்டிக் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயத்தைக் குறைக்கலாம்.



# கடல் எவ்வளவு ஆழமானது?

நிஜத்தில் சொல்வதானால் பூமியில் ஒரே யொரு சமுத்திரந்தான் இருக்கின்றது. ஐந்து சமுத்திரங்கள் என்பது இந்தப் பாரிய சமுத்திரப் பரப்பில், பசுபிக் சமுத்திரம், அட்லாண்டிக்சமுத் திரம், இந்திய சமுத்திரம், ஆர்க்டிக் சமுத் திரம், தெற்கத்தைய சமுத்திரம் என்று அழைக்கப் படு கின்றன.

ஆழம் எவ்வளவு பார்த்தால், இடத்திற்கு இடம் வேறுபடுவதுதான் இந்தச் சமுத்திர ஆழம். கடலுக் கடியில் உள்ள மலைத் தொடர்கள் , செங்குத்தான பள்ளத்தாக்குகள் போன்றவைதான் ஆழத்தை தீர்மானிக்கின்றன.

sonar போன்ற கருவிகளைப் பயன்படுத்தி , நவீன தொழில் நுட்ப வசதிகளின் உதவியுடன் இந்தச் சமுததிரப் பரப்பின் பரவலான ஆழத்தை கண்டறிகிறார்கள். அண்ணளவாக 12,785 அடி (3,897 மீ என்பது கண்டுபிடிப்பு. இதைச் சுருக்கமாக 3.8கி.மீ அல்லது 2.4 மைல் என்று சொல்லி விடலாம்.

மிக ஆழமான சமுத்திரப் பகுதிகள் என்று கண்டறிந்ததை பிரித்துச் சொல்கிறார்கள்.

Molloy Hole என்பது ஆர்க்டிக் சமுததிரத்தின் மிக ஆழமான பகுதி. இது மேல் மட்டத்திலிருந்து 5,669 மீற்றர் ஆழமானது.

Java Trench எனப்படும் பிரதேசம் இந்து மகா சமுத்திரத்தில் 7,725 மீட்டர் (25,344 அடி) ஆகும்.

Puerto Rico Trench எனப்படுவது அட்லாண் டிக் சமுத்திரத்தின் ஆழம் 8,376 மீட்டர் (27,480 அடி) ஆகும்.

Mariana Trench எனப்படுவதுதான் பசிபிக் சமுத்திரப் பிராந்தியத்திற்குரியது.

இதுதான் உலகி லேயே மிக ஆழமான சமுத்திரப் பகுதி.

இதைப் பூகோள வரைபடத்தில் "Challenger Deep." என்று குறிப்பிடுகிறார்கள். இது சமுத்திரத்தின் மேற்கத்தைய பிராந்தியத்தில் காணப்படுவது.

இது எவ்வளவு ஆழமானது என்ற கேள்வி எழுகிறதல்லவா?

சேலஞ்சர் டீப்பின் ஆழம் தோராயமாக 10,984 மீட்டர் (36,037 அடி) ஆகும்.

www.panmugam.com
பன்முகம்



# முயற்சி வெற்றி தரும்

அந்த அழகிய கிராமத்திற்கு ஒரு முனிவர் வந்திருந்தார்.. ஊருக்கு மத்தியில் இருந்த மரத்தடியில் அமர்திருந்தார். யாருமே ஊரில் அவரைக் கண்டுகொள்ளவில்லை.

முனிவர் அல்லவா?

கோபத்தில் சாபமிட்டார் அந்த ஊருக்கு.. " இன்னும் 50 வருடங்களுக்கு இந்த ஊரில் மழையே பெய்யாது. வானம் பொய்த்துவிடும்" இந்த சாபம் பற்றி கேள்விப்பட்ட அனைவரும் என்ன செய்வது என்றே தெரியாமல் கவலையோடு அவரின் காலடியில் அமர்ந்து மன்னிப்பு கேட்டனர். சாபத்திற்கு விமோசனம் கிடையாது என்று கூறிவிட்டார் முனிவர்..

வேறு வழியின்றி அனைவருமே அவரின் காலடியில் அமர்ந்து இருந்தனர் மேலிருந்து இதைக் கவனித்த பரந்தாமன் தனது சங்கினை எடுத்து தலைக்கு வைத்து படுத்துவிட்டான்.

(பரந்தாமன் சங்கு ஊதினால் மழை வரும் என்பது நம்பிக்கை).

இன்னும் 50 வருடங்கள் மழை பெய்ய வாய்ப்பில்லை என்பதால் இனி சங்குக்கு ஓய்வு என்றே வைத்து விட்டான்.

அந்த ஊரில் ஒரு அதிசயம் நடந்தது ஒரே ஒரு உழவன் மட்டும் கலப்பையைக் கொண்டு தினமும் வயலுக்குச் சென்று வந்து கொண்டிருந்தான் . அவனை அனைவரும் பரிதாபமாகவே பார்த்தனர். மழையே பெய்யாது எனும்போது இவன் வயலுக்கு போய் என்ன செய்யப் போகிறான் என்ற வருத்தம் அவர்களுக்கு அவனிடம் கேட்டே விட்டனர் . நீ செய்வது முட்டாள்தனமாக இல்லையா என்று..

அதற்கு அவனின் பதில்தான் நம்பிக்கையின் உச்சம் 50 வருடங்கள் மழை பெய்யாது என்பது எனக்கும் தெரியும்.

உங்களைப் போலவே நானும் உழுதிடாமல் இருந்தால் 50 வருடங்கள் கழித்து உழுவது எப்படி என்றே எனக்கு மறந்து போயிருக்கும்.. அதனால்தான் தினமும் ஒருமுறை உழுது கொண்டு இருக்கிறேன்" என்றான்.

இது வானத்தில் இருந்த பரந்தாமனுக்கு கேட்டது. அவரும் யோசிக்க ஆரம்பித்தார்.. "50 வருசம் சங்கு ஊதமால் இருந்தால் எப்படி ஊதுவது என்று மறந்து போயிருமே". என்றே நினைத்து சங்கை எடுத்து ஊதிப் பார்க்க ஆரம்பித்தார். இடி இடித்தது மழை பெய்ய ஆரம்பித்தது நம்பிக்கை ஜெயித்து விட்டது .

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

~ மகிழா

# மாக்கோலம்



அம்மா போட்ட மாக்கோலம்
அழகாய் அழகாய் பூக்கோலம்!
அதற்கோ வாசனை எதுவுமில்லை,
ஆனால் நிறங்கள் பல உண்டு!

தம்மால் இயலும் விடியலையே
தருமே வானம் அதைப்போல...
தினமும் பிறக்கும் விடியலிலே
திறமாய் போடும் கோலமிது!

நம்மால் இயலும் உதவியென
நன்றாய் இடித்த அரிசியதில்
கோலம் போட்டால் எறும்பு அதை
கொண்டே செல்லும் உணவெனவே!

தும்மா துனுக்கு அரிசியினை
தோரண எறும்புகள் எச்சிலினால்
கெடாமல் இருக்கும் பல மாதம்
எனவே உணவுக்கு அது போதும்!

எம்மாம் பெரிய மனிதர்களோ
இருப்பதைத் தின்று
முடித்திடுவார்!
எறும்புகள் போலே சேமிப்பை
எவரும் செய்தால்
பிழைத்திடலாம்!



– வெ.தமிழழகன்
எம்ஏ.பிஎட்,
சேலம்.


பன்முகம் .காம்
www.panmugam.com

ஆசிரியர், வெளியீட்டாளர்
மகாலட்சுமி
MahaLakshmi
Cell: 9337501889

முதன்மை செய்தியாளர்
Rakesh, C.N.Rajan

துணை ஆசிரியர்கள்
Tina, Arulmozhi,
Thenuka

வடிவமைப்பு
SML GRAPHICS Ph:9444228203

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar
Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
7789941009


## இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழ் முழுவதும் இணையதளத்தையும், வலைதளங்களையும் சார்ந்தே திரட்டப்படும் செய்திகளை ஒழுங்குப்படுத்தி தரப்படும் தன்னிகரில்லா இதழாகும், இந்த தளத்தில் வெளிவரும் செய்திகள், விளம்பரங்கள் புகைப்படங்கள் அனைத்தையும் எந்தவித லாபநோக்கமின்றி தொகுக்கப்பட்டு நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி வாசகர்களின் பார்வைக்கு கொடுக்கும் சிறப்பான ஒரு சேவையை செய்துவருகிறோம். இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி இணையதள சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.

# அறு சுவை என்ன என்ன??



## காரம்

உடலுக்கு உஷ்ணத்தைக் கூட்டுவதுடன் உணர்ச்சிகளை கூட்டவும்,குறைக்கவும் செய்யும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்: வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு, கடுகு போன்றவற்றில் அதிகப்படியான காரச்சுவை அடங்கியுள்ளது.

## கசப்பு

உடம்பிலுள்ள உதவாத கிருமிகளை அழித்து உடம்பிற்கு சக்திகூட்டும். சளியைக்கட்டுப்படுத்தும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்: பாகற்காய், சுண்டக்காய், கத்தரிக்காய், வெந்தயம், எள், வேப்பம்பூ, ஓமம் போன்றவற்றில் இந்த சுவை மிகுதியாய் உள்ளது.

## இனிப்பு

\உடம்பு தசையை வளர்க்கும் தன்மை வாய்ந்தது. வாதத்தைக் கூட்டும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்: பழவகைகள், உருளை, காரட் போன்ற கிழங்கு வகைகள், அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் , கரும்பு மற்றும்

தண்டு வகைத் தாவரங்களிலும் இனிப்புச் சுவை அதிக அளவில் அடங்கியுள்ளது.

## புளிப்பு

இரத்தக் குழாயின் அழுக்கை நீக்கவல்லது. வாதத்தைக்கூட்டும்.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்: எலுமிச்சை, புளிச்ச கீரை, இட்லி, தோசை, அரிசி, தக்காளி, புளி, மாங்காய், தயிர், மோர், நார்த்தங்காய் போன்றவற்றில் அதிகம் உள்ளது.

## துவர்ப்பு

இரத்தம் வெளியேறாது தடுக்க வல்லது. இரத்தம் உறைவதை விரைவுபடுத்தும் தன்மையுள்ளது.

கிடைக்கும் உணவுப் பொருட்கள்: வாழைக்காய், மாதுளை, மாவடு, மஞ்சள், அவரை, அத்திக்காய் போன்ற காய் வகைகளில் அடங்கியுள்ளது.

## உப்பு



ஞாபகசக்தியை அதிகரிக்கும். அதிகமானால் உடம்பில் வீக்கத்தை ஏற்படுத்தும்

கிடைக்கும் உணவுப் பொருட்கள்: கீரைத் தண்டு, வாழைத்தண்டு, முள்ளங்கி, பூசணிக்காய், சுரைக்காய், பீர்க்கங்காய் போன்றவற்றில் அதிகமாய் இருக்கின்றது

– ராஜகோபாலன்.J
சென்னை 18

# மீம்ஸ் கலாட்டா


அம்பயர்களுக்கு சரக்கு கிரக்க
வாங்கிகுடுத்து
கரெக்ட் பண்ண பாருங்கடா...
குறிப்பா பூரான் ஆடும்போது
மண்டை சொரியிர மாறி
நைஸா அந்த விரல தூக்க சொல்லுங்கடா..
😁😁😁


இத்தாலியில் பெண் ஒருவர் முகநூலில் தனது பதிவுக்கு லைக்,கமென்ட் பண்ணாதால் அந்த குரூப் அட்மீனை வீட்டுக்கு வரவைத்து விரல்களை வெட்டிய சம்பவம் அரங்கேறியுள்ளது
KKS
இந்தா வந்துட்டேன்..
அட்மின்
ஓடுறா ஓடுறா குரூப்ல உள்ள எல்லாபோஸ்ட்டுக்கும் போய் லைக்க போட்டுடு வந்துடுவோம்


ஐய்யய்ய.... பையன் ரொம்ப நல்லவனா இருப்பான் போல... இப்படி இருந்தா பொழப்பு நடத்த முடியாதே....
பொண்ணு வீட்டுக்காரங்க
இவனை நம்பி எப்படி பொண்ணு குடுக்க முடியும்......
என்னங்கடா இது.... நல்லவனா இருக்கிறது ஒரு குத்தமாடா....


ரோட்ல ரொம்ப ஸ்பீடா பைக் ஓட்டுறவங்களுக்கு தண்டனையா ஒரு மாசம் ரோடு ரோலர் ஓட்ட விடணும்...
பொறுமைனா என்னான்னு தெரிஞ்சிக்க..😛

# சாதனை புரிந்த புகைப்படம்



இந்தப் படம் இந்திய வனவிலங்கு புகைப்படக் கலைஞர் ராகுல் சச்தேவ் எழுதிய "எப்போதும் போற்ற வேண்டிய ஒரு தருணம்" என்ற தலைப்பில் யானையின் புகைப்படம்.

இந்தப் புகைப்படம் 2025 ஆம் ஆண்டின் வன விலங்கு புகைப்படக் கலைஞர் விருதுகளில் பெரிதும் பாராட்டப்பட்டது.

மெதுவாக நகரும் உருவப்படம் என்று விவரிக்கப்படும் இந்தப் படம், உயரமான பச்சை இதய மரங்கள் நிறைந்த காட்டில் ஒரு யானையைக் காட்டுகிறது.

ராகுல் சச்தேவ் ஒரு விருது பெற்ற வனவிலங்கு புகைப்படக் கலைஞர் மற்றும் கல்வியாளர் ஆவார், அவர் தனது காட்சி கதைசொல்லலுக்கு பெயர் பெற்றவர்.

இந்தப் புகைப்படம், போட்டிக்கான உலகளாவிய 60,000 க்கும் மேற்பட்ட பதிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது.

# அப்பாவின் தப்புக் கணக்கு

மருத்துவமனையில் இறுதி மூச்சி வாங்கும் அப்பா கேட்கிறார் மகனிடம்:

"மகனே என்னால் மறக்க முடியாத ஒன்று..

நீ ஒன்பதாவது படிக்கும்போது கணக்கு பரீட்சை மார்க்ன்னு 90 காண்பிச்சே.. எனக்கு நம்பிக்கையே இல்ல.. ஒன்பதுடன் நீ பூஜ்யத்தை சேர்த்து விட்டதாக குற்றம் சாற்றினேன்.. நீ உறுதி யாக மறுத்தாய் ..."

"அப்பா என்ன இதெல்லாம்? முப்பது வருஷ கதையை சொல்லிண்டு?"

"இல்ல ரொம்ப நாளா என்னை உறுத்தற விஷயம் இது... நான் உன்னை அடிச்சு கேட்டும் நீ பூஜ்ஜியத்தை சேர்க்கலை என்ற சொல் லிண்டிருந்தே.. என்னால் அதை நம்பவும் முடியல.. இப்ப கேக்கறேன் உண்மையை சொல்லு? பூஜ் யத்தை சேர்த்தது நீ தானே?"




"நீங்க எப்ப கேட்டாலும் என் பதில் ஒண்ணுதான்பா.. என்ன?

"நான் பூஜ்யத்தை சேர்க்கவேயில்லை.."

"ஆனா நீ 90 மார்க் வாங்கற மாணவன் இல்லையே?'"

"சரிப்பா.. நீங்க நினைத்ததும் சரி.. நான் சொன்னதும் சரி"

"அது எப்படி?'

"நான் சேர்த்தது 9ஐ.."

# பெண்மையை போற்றுவோம்

## வேதனைகளையும் சாதனையாக்குவோம்



உலகில் ஏதோ ஒரு மூலையில் ஒவ்வொரு 90 வினாடிக்கும்ஞ் ஒரு பெண் பிரசவத்தினால் அல்லது கர்ப்பம் தொடர்பான பிரச்சனையினால் இறந்து போகிறார்.

பெண்கள் ஒரு வருடத்தில் 120 மணி நேரங்கள் தங்களை கண்ணாடியில் பார்த்துக்கொள்ள செலவிடுகிறார்கள்.

பெண்களுக்கு தங்களிடம் அறிவுரை கேக்கும் மற்றும் குழந்தைகள் அல்லது பிராணிகளிடம் அன்பாக இருக்கும் ஆண்களை ரொம்ப புடிக்கும்.

பெண்கள் ஒருநாளில் 20,000 க்கும் மேற்பட்ட வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள்.

வெள்ளைக்கார பெண்களை காட்டிலும் கருப் பினத்தை சேர்ந்த பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்ள அதிகமான சவால்களை எதிர் நோக்குகிறார்களாம். இவர்கள் அதிகப்படியான மனவுளைச்சளுக்கும் ஆளாகிறார்கள்.

பெண்களால் ஒருவரின் முகத்தை கண்டு, அவரின் மனதை புரிந்துகொள்ள முடியும்.

வாகனம் ஓட்டும் பயிற்சியில் தேர்ச்சி பெறஞ் பெண்களுக்கு ஆண்களை விட கூடுதல் நேரம் தேவைப்படுகிறது.

ஒரு சில பெண்களை மன்னிப்பு கேட்டுசமாதா னப்படுத்த முடியாதுஞ். அவர்களை சமாதானப் படுத்திய பிறகுதான் மன்னிப்பு கேக்கவேண்டும்.

70% பெண்கள் தங்கள் வேதனையையும் வலியையும் மௌனத்தால் வெளிப்படுத்துகிறார்கள்.

பெண்களின் இருதயம் ஆண்களின் இரு தயத்தை விட வேகமாக துடிக்கும்.

பெண்கள் சமாதானப்படுத்துவதில் கைத் தேர்ந்தவர்கள்.

பெண்கள் ஒரு நிமிடத்தில் 19 முறை

கண்ணி மைக்கிறார்கள்.

பெண்களுக்கு உடம்பு முழுக்க கண் என்று சொல்லுவார்கள். ஒருவர் தன்னை எவ்வளவு தூரத்திலிருந்து பார்த்துக் கொண் டிருந்தாலும் அவர்களால் அதை உணரமுடியும்.

பெண்களுக்கு ஆண்களை காட் டிலும் அதிகமான நோய் எதிர்ப்பு சக்தி உண்டு.

ஒரு சராசரி பெண்ணால் 47 மணி நேரம் 15 நிமிடம் மட்டுமே ஒரு ரகசியத்தை பாதுகாக்க முடியும்.

பெண்களால் ஆண்களை காட்டிலும் அதிக மான வலியை பொறுத்துக்கொள்ள முடியும். இதற்கு அறிவியல் ரீதியான சான்றும் உள்ளது. So, மனதளவில் மட்டுமன்றி உடலளவிலும் ஒரு பெண் வலிமை யானவளே!

பெண்ணானவள் தன்னை ஒரு ஆண் புகழுவதை விடஞ். ஒரு பெண் புகழுவதை இன் னும் அதிகமாக விரும்புகிறாள். ஒரு ஆண் தனக்கு பிடித்த பெண்ணிடம் செய்யக்கூடாத ஒரு தவறு, அவள் முன்னிலையில் இன்னொரு பெண்ணை புகழுவது.

பெண்கள் ஒரு வருடத்தில் 30–64 முறை அழுகிறார்கள். ஒரு நாளில் 62 முறை சிரிக்கி றார்கள்.

பெரும்பாலான பெண்கள் தங்களுடைய கணவனை அல்லது காதலனை பிற பெண்கள் பாக்கக்கூடாது என்பதற்காக வேண்டுமென்றே அவர்களுக்கு ஒருசில உணவுகளை கொடுத்து, அவர்களை பருமனாக்குகிறார்கள்.

நாம் கேக்காமலே நமக்கு சமைத்து தரும் பெண்கள், நம் மீது அதிகமான அன்பை வைத்திருக்கிறார்கள்.

பெண்கள் என்ன உடை உடுத்தவேண்டும் என்பதை முடிவுசெய்யவேஞ்.. தங்கள் வாழ்நாளில் ஒரு வருடத்தை செலவிடுகின்றனர்.

உலகத்திலேயே இரண்டாவது கொடூரமான வலி, பிரசவ வலியாகும். முதலாவது கொடூரமான வலி உயிரோடு எரிக்கப்படுவது. தவறேதும் செய்யாமலே "உடன்கட்டை ஏறுதல்" என்னும் பெயரில் அக்காலத்தில் பல பெண்கள் உயிரோடு எரிக்கப்பட்டனர்.

பெண்களால் ஒரு விசயத்தை மிக மிக துல்லியமாக கணிக்க முடியும். "பெண் புத்தி பின் புத்தி" என்று முன்னோர்கள் சொல்லி சென்றதை பலர் பெண்கள் பிற்போக்கு சிந்தனையாளர்கள் என்று தவறாக எடுத்து கொண்டார்கள். உண்மையில், பின்னே வருவதை முன்னே கணிப்பவள் பெண், என்பதே இதன் பொருளாகும்.

பெண்கள் ஆண்களை விட மிக சீக்கிரமாக



பேச, எழுத, படிக்க கற்றுக்கொள்கிறார்கள்.

ஒரு பெண் தன் வாழ்நாளில் சராசரியாக 4 வருடங்கள் மாதவிடாய் அனுபவிக்கிறாள்.

ஒரு பெண்ணுக்கு பிடித்த பாடல்ஞ் அவள் உதடுகளை விட அவளை பற்றி அதிகமாக சொல்லிவிடும்.

90% பெண்கள் தங்களுக்கு தெரியாத குழந்தைகளை உரிமையோடு கொஞ்சுகிறார்கள்.

உதட்டுசாயம் (லிப்ஸ்டிக்) பயன்படுத்தும் பெண்கள், ஏறக்குறைய 2 அல்லது 3 கிலோ லிப்ஸ்டிக்கை சாப்பிட்டு முடிக்கிறார்கள்.

ஒருவர் தன்னிடம் பொய் பேசுகிறார் என்று தெரிந்தால்ஞ் அவர்களிடம் ஒன்னும் கேக்காமல், வெறிக்க வெறிக்க பார்ப்பார்களாம்.

பெண்கள் தங்கள் காதலனை விட அவர்களின் தம்பி/அண்ணண்களை அதிகமாக நேசிக்கிறார்களாம்.



ஒரு பெண் சிறுவயதில் எப்படி இருந்தாரோ அதே மனநிலையில் வளர்ந்தபிறகு இருக்க வாய்ப்பில்லை. சிறுவயதில் குழந்தைத்தனமாக இருந்தவர் தற்போது மனமுதிர்ச்சியுடனும் (mature), சிறுவயதில் மனமுதிர்ச்சியுடன் இருந்தவர், பிறகு குழந்தைத்தனமாக மாறிவிடுவார்களாம்.

33% பெண்கள் தாங்கள் பருமனாகஇருப்பதாக நினைக்கிறார்கள், ஆனால் 52% பெண்கள் தங்கள் உடல் எடையை குறைப்பதில் ஈடு படுகிறார்கள். உலகில் 19% பெண்கள் தேவையில்லாமல் உடல் எடையை குறைக்கிறார்கள்.

100 பெண்களில் 1 பெண் மட்டுமே தன் காதலனை திருமணம் செய்து கொள்கிறார்.

ஒருசில பெண்கள் கொஞ்சம் திமிருடன், யாரையும் நம்பாமல், கடு கடுவென இருப்பார்கள். இவர்கள் யாருடனும் பழகாமல் தன்னை சுற்றி ஒரு பெரிய மதில் எழுப்பியிருப்பார்கள். சமுதாயமும் கடந்து சென்றவர்களும் அவர்கள் மீது வீசிய கற்களே அங்கு மதிலாக நின்றிருக்கும்.

75% பெண்கள் தனக்கு விடை தெரிந்தபிறகே கேள்வியை கேக்கிறார்கள்.

ஒரு சராசரி பெண் தன் வாழ்நாளில் 25,181 மணிநேரங்கள் மற்றும் 53 நிமிடங்கள், ஷாப்பிங் செய்ய செலவிடுகிறார்

உளவியல் படி, நம்மால் நாம் நேசித்தவரை வெறுக்கமுடியாது. ஆனால் அதே உளவியல்படி, ஒரு பெண் எந்தளவிற்கு ஒருவரைநேசிக்கிறாளோ, அந்தளவுக்கு அவரை வெறுக்கவும் முடியும் என்று கூறப்படுகிறது.

பெண்களுக்கு ஆண்களை காட்டிலும் அதிகமான கெட்ட கனவுகள் வருகிறதாம்.

ஐந்தில் இரண்டு பெண்கள் அனுதாஃபோபியா (anuthaphobia) என்னும் போபியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது காதல்கிடைக்காது போய்விடுமோ என்கிற பயம். 100% ஒரு பெண்ணின் மனதை புரிந்து கொண்டவர்யாருமில்லை. ஒரு பெண் கோவமாக பேசிகொண்டிருக்கும் போதே அவர் கண்கள் கலங்குகிறது என்றால் அவர் மனதில் கோவத்தை காட்டிலும் வலி அதிகம் இருக்கிறது என்று அர்த்தம்.

ஒரு பெண் அழவேண்டிய இடத்தில் சிரிக்கிறார் என்றால், அவரை விட மிக ஆபத்தான விஷயம் வேறில்லை. பத்தில் ஏழு பெண்கள் எப்போதுமே தங்களை குறைத்து மதிப்பிடுகிறார்களாம்.

பெரும்பாலான பெண்களுக்கு திருமணம் முடிந்தபிறகுதான் தாயுடன் மிக நெருக்கமான உறவு ஏற்படுகிறதாம்.

தன் வாழ்வில் போதிய அன்பை பெற்றிடாத பெண், உண்மையான அன்பு கிடைத்தாலும் அது நிலைக்குமா, நிலைக்காதா? உண்மையானதா?, போலியா? என்று எண்ணியே, ஒரு முடிவுக்கு வராமல் காலத்தை வீணடிப்பாளாம்.

சுபிரி யாரடி

# காம்ப்ளெக்ஸ்

ஃபோன் சிணுங்கியது. எடுத்த பி.ஏ. " ஹலோ ! சாரங்கபாணி, பி.ஏ. டு ஜி. எம். ஸ்பீக்கிங் !" பவ்யமாக கூறினான்.?

மறுமுனையில் கர கரவென்ற குரல் "ஹலோ! சக்ரவர்த்தி இருக்கான்னா.. கூப்பிடு!" எக்காள மும் அலட்சியமும் சேர்ந்து ஒலிக்க கடுப்பாகிப் போனான் சாரங்கபாணி.

தன்னை அந்த நபர் ஒருமையில் அழைத்தது வேறு பிடிக்கவில்லை. இருந்தாலும் பல்லைக் கடித்துக் கொண்டு " எந்த சக்ரவர்த்தி?" பொறுமையமாகக் கேட்டான்.

"அதான்யா... ஜி.எம்.மா இருக்கானே! அவனத் தான் கூப்பிடு!"

என்ன ஒரு கொழுப்பு! பெரிய நிறுவனத்தின் டாப் போஸ்டில் இருப்பவர். ஆறு இலக்கம் சம்பளம் வாங்கும் உயர் அதிகாரி! அவரைப் போய் ஒருமையில் அழைப்பதா? ஆத்திரம் பற்றிக்கொண்டது.

அவர் யாராவது வேண்டுமானாலும் இருக்கட் டும். முதலில் தான் இன்னார் என்று கூற வேண்டும். பிறகு மரியா தையுடன் பேசவேண்டும். பவ்ய மில்லை. எடுத்த எடுப்பில்' அவன் இவன்' என்று அழைத்தது கொஞ்ச ங்கூடப் பிடிக்க வில்லை.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஃபோனை வைத்தான் சாரங்கபாணி. காலையில் மூடு அவுட் ஆனது.

அடுத்த பத்தாவது நிமிஷம் ஜி.எம். அழைப்ப தாக பியூன் வந்து சொல்ல, ஜி.எம்.அறைக்குப் பறந்தான் சாரங்கபாணி. " எக்ஸ்யூஸ் மி சார் !"

ஃபைல் பார்த்துக்கொண்டிருந்த சக்கரவர்த்தி தலை நிமிர்ந்தார். "சாரங்கபாணி! கொஞ்ச நேரம் முன்னால எனக்கு ஃபோன் வந்ததா?"

சாரங்கபாணிக்கு வேர்த்துவிட்டது. நடுக்கமும் ஏற்பட்டது. மலங்க மலங்க முழித்தான்.' யாரோ ஜி.எம்.முக்கு வேண்டியவர்தான் ஃபோன் செய் திருக்கவேண்டும்.

ஆத்திரத்தில் ரிஸீவரை வைத்து விட கோபம் கொண்ட நபர்






ஜி.எம்மிடத்தில் போட்டுக் கொடுத்துவிட்டார். தான் இன்னார் என்று ஆரம்பத்தில் கூறியிருந்தால் சுதாரித்திருக்கலாம். சே! வகை யாக? மாட்டிக்கொண்டோமே...' அச்சத்தில் மனசு கிடந்து தவித்தது.

"சார்!... வந்து..." தயங்கித் தயங்கி பேச ஆரம் பித்தான். "ஃபோன்ல உங்களை ஒருமாதிரியா அழைத்தார்.

அதோடு தான் இன்னார்ன்னு சொல்லாம ஒரு மையில அவர் பேசினது பிடிக் கல்ல. அதனால கட்பண்ணிட்டேன். நான் செஞ்சது தவறுன்னா மன்னிச்சிடுங்க சார் !"

"ஃபோன் பண்ணது யார் தெரியுமா? என்னோட ஃபாதர்! என் பர்சனல் லிங்க் எங்கேஜ்டா இருந்ததாலே அங்கே காண்டாக்ட் பண்ணியிருக்கார்."

"சார்...." அரண்டுபோனான் சாரங்க பாணி." சார் ! அழைச்சது உங்க ஃபாதர்ங்குறது எனக்கு தெரியாமப் போச்சு.. .ஐயம் எக்ஸ்ட்ரீம்லி ஸாரி சார்!" அப்படியே ஒடுங்கிப் போய் நின்றான்.



"இட்ஸ் ஆல்ரைட் சாரங்கபாணி! தப்பு உங்க பேர்ல இல்ல. எங்கப்பா ரெயில்வேயில் ஒரு பெரிய போஸ்ட்லேர்ந்து ரிடையரானவர். சுபிரி யாரடி காம்ப்ளெக்ஸ் ஜாஸ்தி.

இன்னும் தான் பதவியில இருக்குறமாதிரி எண்ணிண்டு நடந்துக்கிறார். தன்னை யாரும் கேள்வி கேட்கக் கூடாது சொன்ன படி நடக்க ணுங்குற ஒரு ஈகோ! அதனாலதான் ஃபோன்ல நீங்க ஒரு மூணாவது மனுஷர்ன்னு தெரிஞ்சும் உங்கக்கிட்ட அப்படி பேசியிருக்கார். ஜஸ்ட் ஃபர்கெட் இட்!"

"ஓ.கே சார்!" நல்ல வேளையாக ஜி.எம். தன்னை தப்பாக எடுத்துக் கொள்ளாமல்போனது தன் நல்ல காலம் என நினைத்தான். மனசு லேசாகிப்போய் தன் இருக்கைக்குத் திரும்பினான் சாரங்கபாணி.

– லெட்சுமி நாராயணன்

# மீம்ஸ் கலாட்டா



இவங்க குடிசை வீட்டில் லாம்
இருக்கமாட்டங்களாம்
#Ghost
#Ghost
அரண்மனை ல தான் இருப்பாங்களாம்





பெண்கள் திருமனத்திற்கு
முன் செல்வி...
திருமனத்திற்கு பின் திருமதி...
f/alwzsmle
ஆண்கள் திருமனத்திற்கு முன் திரு..
திருமனத்திற்கு பின் "திருதிரு"...




கொசு : அப்புறம், சொத்துல எப்போ
பங்கு பிரிப்பிங்க...
நான் : உனக்கு எதுக்குடா
பங்கு தரணும்...
f/alwzsmle
கொசு : பின்ன.. உங்க ரத்தம்
என் உடம்புலயும் இருக்குல...




எங்க வீட்டுக்கு திருடன்
வந்து நகை பணம் டிவி
எல்லாம் தூக்கிட்டு
போயிட்டான்!!
ATKVA
நான் அவ்வளவு
சொல்லியும் என்
ஸ்கூல் பேக் எடுக்க
மறந்துட்டான் பாவி...


சுடச்சுட செய்திகளை
அதிகாலை வேலையில்
தெரிந்துகொள்ள
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
தமிழ்நாடு
இ/பேப்பர்
படியுங்கள்



# மறக்கமுடியுமா..?

# வாடகை சைக்கிள்

உலகம் மாறித்தான் போயுள்ளது ....

ஒரு மணி நேரத்துக்கு அப்போதெல்லாம் சைக்கிள் வாடகை 50 காசு என்றிருக்கும். அதிலும் சின்ன சைக்கிள் கூட உண்டு.கேரியர் வைத்த சைக்கிள், கேரியர் இல்லாத சைக்கிள், டைனமோ வைத்த சைக்கிள் என்று வாட கைக்கு விடுவார்கள்.

'நோட்ல பேரும் டைமும் எழுதிக்கிட்டு எடுத்துட்டுப் போ..' என்று விசிறிக்கொண்டே, தாத்தாவோ பாட்டியம்மாவோ சொல்லுவார்கள்.

உடனே வாடகை சைக்கிள் எடுக்க வந்த சின்னப்பசங்க முதல் பலரும் 10.20மணிக்கு சைக்கிள்எடுத்தால், 10.30 என்று எழுதுவார்கள்.

அந்த ஒரு பத்து நிமிஷம், இன்னும் கொஞ்சம் ஓட்டலாமே என்கிற ஆசையின்வெளிப் பாடுதான் அது..!

வாடகை சைக்கிள் எடுப்பவர்கள், நியூமர லாஜிப்படி அந்த எண் கொண்ட சைக்கிளை எடுப்பார்கள்.

'ஏழாம் நம்பர் வண்டி வெளியே போயிருக் குப்பா..' என்று சொன்னால், அந்த சைக்கிள் வரும்வரைக்கும் காத்திருப்பார்கள்.

இன்னும் சில காமெடிகளும் நடக்கும். சைக்கிளை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, தெரிந்தவரிடம் அல்லது நண்பரிடம் அல்லது உறவினரிடம் பணம் கேட்கச் செல்வார்கள். பணம் கிடைக்காத நிலையில், சைக்கிளை விட வும் பணமிருக்காது. அதற்காக, நான்கைந்து நாட்கள் சைக்கிளை வைத்துக்கொண்டு சுற்று பவர்களும் உண்டு. பிறகு பணம் வந்ததும் சைக்கிளை ஒப்படைப்பார்கள்.

இப்போது எதற்கெடுத்தாலும் பைக்கை எடுக்கிறோம். கறிவேப்பிலை வாங்கவே, டூவீல ரை எடுத்துக் கொண்டு தான் செல்கிறோம்.

அப்போது சைக்கிளில் சிட்டாகப் பறந்து, எட்டெல்லாம் போட்டு, கெத்துக் காட்டுவோம்.


இப்போதெல்லாம் ஒரு வீட்டில், இரண்டு அல்லது மூன்று டூவீலர்கள் இருக்கின்றன.

அப்பாவுக்கு பைக், மனைவிக்கு ஆக்டீவா, மகளுக்கு ஸ்கூட்டி என்று நிற்கின்றன.


சைக்கிளுக்கும் நமக்குமான பந்தம்... பால்யத்தில் இருந்தே இரண்டறக் கலந்தது.

எத்தனை ராயல் என்பீல்டுகளும் யமஹாக் களும் இருந்தாலும், நமக்கும் நம் உடலுக்கும் எனர்ஜியையும் புத்துணர்ச்சியையும் கொடுக்கிற சைக்கிளை, மறக்கமுடியுமா..?

# கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்




தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!




தினமும் வெளிவரும் நமது

## தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இணையதள நாளிதழை தொடர்ந்து படியுங்கள், தினமும் நாளிதழில் வெளிவரும் செய்திகள் குறித்து கேள்வி கேட்கப்படும், சரியான பதிலை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பிவைத்தால் குலுக்கல் முறையில் அற்புதமான பரிசுகள் வழங்கப்படும்.

**Whatsup no.8122664699**

# குழந்தைகள் மரணத்தை தடுத்து நிறுத்திய கண்டுபிடிப்பு






# மருத்துவத்திற்கான முதல் நோபல் பரிசின் பின்னணி

நடுஇரவில் தடதடவென்று கதவைத் தட்டும் ஓசை. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த டாக்டர் ஹென்ரிச் கீஸ்லர் பதறி விழித்தார். பெர்லின் பல்கலைக்கழக அறுவைசிகிச்சை கிளினிக்கின் குழந்தைகள் பிரிவின் மருத்துவரான அவர், டாக்டர் வான் பெர்க்மேனின் மேற்பார்வையின் கீழ் பணிபுரிந்தார்.

தேதி டிசம்பர் 20, 1891. கடும் குளிர் காற்று வீசிய அந்த இரவில், எப்போதையும் மீறிய பனிப்பொழிவு நகரை மூடிக் கொண்டிருந்தது. நாள் முழுவதும் குழந்தைகள் வார்டில் சேவையாற்றிய அவர், சில மணிநேரங்களுக்கு முன்புதான் வீடு திரும்பி, சோர்வாகத் தூங்கியிருந்தார்.

கதவைத் தட்டும் ஓசை தொடர்ந்தது. 'இந்த நள்ளிரவில் யாராக இருக்கும்?' என எண்ணி, எழுவதற்கு மனமில்லாமல், படுக்கையிலிருந்து எழுந்தார். கதவைத் திறந்து பார்த்த அவரது கண்கள், அதிர்ச்சியில் விரிந்தன.

கண்ணீரும் கம்பலையுமாக, முகம் வெளிறி நின்ற ஒரு இளம் தாய். அவரைத் தொடர்ந்து

வந்த மருத்துவமனை செவிலியர், அவளுக்கு ஆதரவாக நின்றார்.

டாக்டர், என் குழந்தைக்குக் டிப்தீரியா (தொண்டை அடைப்பான் நோய்)' முற்றுகிறது, " என்று விம்மினாள் அந்தத் தாய். "மூச்சுவிட முடி யாமல் திணறுகிறது. உங்களிடம் ஒரு புது மருந்து இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை! என் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுங்கள். உங்களைத் தவிர, எனக்கு வேறு வழியே தெரியவில்லை!"

அந்தச் செவிலியரும், குரலில் அவசரத்தைக் கலந்து, "டாக்டர், அந்தச் சிறு குழந்தையின் நிலை பார்க்கச் சகிக்கவில்லை. வயது வெறும் எட்டுதான். தயவு செய்து ஏதாவது செய்யுங்கள்," என்று கெஞ்சினார். "பேராசிரியர் பெஹ்ரிங்கும், டாக்டர் வெர்னிக்கேவும், நீங்களும் இந்த அற்புத மருந்து குறித்து மருத்துவமனையில் பேசிக்கொண் டதை நான் கேட்டேன். அதனால்தான் இவர்களை உங்களிடம் அழைத்து வந்தேன்."

டாக்டர் கீஸ்லரின் முகம் வாட்டமடைந்தது. "அம்மா, நாங்கள் ஒரு புதிய சிகிச்சை முறை யைப் பரிசோதனை செய்து வருகிறோம்," என்று பரிதாபத்தோடு கூறினார், கைகளைப் பிசைந்த வாறு. "இப்போதுவரை விலங்குகளில் மட்டுமே அதைச் சோதித்துள்ளோம். போதுமான வெற்றி கிடைத்துவிட்டது என்று சொல்ல முடியாது. ஒரு பரிசோதனையில்,சோதனைக்காகப் பயன்படுத்திய முயல்கள் அனைத்தும் இறந்துவிட்டன. அதனால் தான், இதைக் குழந்தைகளுக்குப் பயன்படுத்த டாக்டர் வான் பெர்க்மேன் கண்டிப்பாகத் தடை விதித்துள்ளார்."

"எப்படியிருந்தாலும், இந்த மூச்சுத் திணறலில் என் குழந்தை இன்றோ நாளையோ மூச்சுவிட முடியாமல், வலியால் துடித்துத் துடித்து இறந்துவிடும்!" என்று கதறினாள் தாய். "இந்த ஒன்றையாவது முயற்சித்துப் பார்ப்போமே என்று தான் உங்களை நம்பி வந்தேன்."

அந்தத் தாயின் நம்பிக்கையை அவரால் மறுக்க முடியவில்லை. உடனே உடையை மாற்றிக் கொண்டு, மருத்துவமனை நோக்கி விரைந்தார்.

இந்தச் சம்பவம், வருங்காலத்தில் உலகம் முழுவதும் உள்ள மருத்துவ மாணவர்களுக்கு ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும் வரலாற்று நிகழ்வாக மாறப்போகிறது என்பதை, அந்த இரவில் அங் கிருந்த யாருக்குமே தெரியாது. மேலும், இந்த மரணத் தறுவாயில் இருந்த குழந்தைக்கு அளிக் கப்படவிருந்த பரிசோதனை மருந்தே, பத்து ஆண்டுகள கழித்து முதல் மருத்துவ நோபல் பரிசைப் பெறும் என்பதும், அவர்கள் அறியாத ஒரு உண்மையாகவே இருந்தது.

டிப்தீரியா தொற்று, தொடக்கத்தில் ஒரு சாதாரண காய்ச்சல் போலத் தோன்றும். ஆனால் அடுத்த சில நாட்களிலேயே தொண்டையில் கடும் வலியும், வீக்கமும் தோன்றும். விரைவில், தொண்டையிலும் மூக்கிலும் ஒரு சாம்பல்பழுப்பு நிறப் படலம் பரவத் தொடங்கும். நாளுக்கு நாள் இந்தப் படலம் கனத்து, தடிமன் அடைந்து கொண்டே வரும்.


இறுதியில், விழுங்குவதும் சுவாசிப்பதும் சாத்தியமற்றுப்போகும். நோய் முற்றிய நிலையில், அடுத்த சில நாட்களில் மூச்சுத்திணறல் மூலம் மரணம் நிகழும். இந்தக் கொடிய தன்மைக்காகவே, இந்நோயை 'தொண்டை அடைப்பான்' என்று அழைத்தனர்.

இந்த அழிவின் பின்னணியில் 'கோரினே பாக்டீரியம் டிப்தீரியா' (Corynebacterium diphtheriae) என்ற பாக்டீரியா உள்ளது. இந்த நுண்ணுயிர் உமிழும் ஒரு வகைக் கிருமிநச்சு துகள்கள், ரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் பரவுகிறது. இந்த நச்சுத்துகள்கள், குறிப்பாக வாய், தொண்டை மற்றும் மூச்சுக் குழாய்களைத் தாக்கும். அப்பகுதி உயிரணுக்களை அழிக்கத் தொடங்கும். இந்த அழிந்த உயிரணுக்களின் துகள்கள்தான், தொண்டையைப் படர்ந்து மூச்சுத் தடையை உருவாக்கும் பழுப்புநிறப் படலமாக மாறுகின்றன. இந்தக் கிருமி பெரியவர்களையும் தாக்கினாலும், சிறுவயது குழந்தைகளின் மூச்சுக் குழாய்கள் சிறியவையாக இருப்பதால், அவர்களில் மூச்சடைப்பு விரைவாகவும் கடுமையாகவும் அமைகிறது.

டிப்தீரியாவுக்கு எதிராக அப்போது மருத்துவர்களிடம் இருந்த சிகிச்சை வழிமுறைகள், மிகவும் வலுவற்றதாக இருந்தன. நோயாளியின் வலியைத் தணிக்க ஆபின் போன்ற மயக்க மருந்துகளைக் கொடுத்து, கடைசி நாட்களில் அவர்கள் மூச்சுத் திணறி இறப்பதைக் கண்ணால் காண்வதுதான் ஒரு வழி.

இறுதி முயற்சியாக, தொண்டைப் பகுதியில் நேரடியாக மூச்சுக் குழாயில் ஒரு சிறு துளையிட்டு (Tracheostomy) மூச்சுவிட வழி செய்வது, அல்லது ஒரு குழலைத் தொண்டை வழியாக நுரையீரலுக்குள் செருகி மூச்சுப் பாதையைத் திறப்பது போன்ற முறைகள் கடைசி நம்பிக்கையாகத் தங்கியிருந்தன. ஆனால் தொற்று ஆழமாக வேரோடி இருந்தால், இந்த முறைகள் சில நாட்கள் வாழ்வை நீட்டிப்பதே தவிர, மரணத்தைத் தடுக்க முடியாது.

பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், இளம் குழந்தைகளின் உயிரைக் குடிக்கும் கொடிய நோய்களில் டிப்தீரியா





முன்னணியில் நின்றது. நோய்த் தொற்று ஏற்பட்டவர்களில், 10 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையிலான குழந்தைகள்உயிரிழந்தனர். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி, இந்த நோய் அனைத்துக் குழந்தைகளுக்குமே ஒரு தந்திரமான பிளேகாக அச்சமூட்டியது.

இதே கால கட்டத்தில் ஜெர்மனியில் ஆண்டுக்கு 50,000 குழந்தை மரணம் டிப்தீரியாவினால் ஏற்பட்டது.

டிப்தீரியா நோய் எவ்வாறு ஏற்படுகிறது என்பது 1883ம் ஆண்டுவரை ஒரு புதிராகவே இருந்தது. அந்த ஆண்டு, சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நோயியல் நிபுணர் எட்வின் கிளெப்ஸ், நோயால் மரணமடைந்தவர்களின் உடலைப் பரிசோதித்து, இந்த நோயை ஒரு வகை நுண்ணுயிர்க் கிருமிதான் ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து, ஓராண்டு கழித்து, ஜெர்மன் நுண்ணுயிரியாளர் ஃபிரெட்ரிக் லோஃப்லர் ஆய்வகத்தில் இந்தக் கிருமியைச் செயற்கையாக வளர்க்கும் முறையைக் கண்டுபிடித்தார். இதன் மூலம், இந்தக் கிருமி குறித்த ஆய்வுகள் வேகம் பெற்றன. ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட கிரு மியைக் கொண்டு கினிஎலிகள், முயல்கள், குதிரைகள் மற்றும் நாய்களில் தொற்று ஏற்படுத்த முடிந்தது.

முக்கியமான திருப்பம் ஒன்று நிகழ்ந்தது. ஆய்வாளர்கள், டிப்தீரியா கிருமி வளர்ந்த ஊட்டத் திரவத்தை மட்டும் வடிகட்டி எடுத்து, அதனை விலங்குகளில் செலுத்தினர். கிருமிகள் இல்லாத அந்தத் திரவமும் நோயை ஏற்படுத்தியது! இந்தக் கண்டுபிடிப்பின் வழியாக, கிருமி அல்ல, கிருமி உமிழும் நச்சுப் பொருள்களே (Toxin) டிப்தீரியா நோயின் உண்மையான காரணம் என்பது வெளிச்சத்திற்கு வந்தது.

இந்த திசையில், 1889-1890 ஆம் ஆண்டுகளில், பாரிஸில் உள்ள பாஸ்டியர் நிறுவனத்தின் விஞ்ஞானிகள் எமில் ரூக்ஸ் மற்றும் அலெக்ஸாண்ட்ரே யெர்சின் ஆகியோர் கிருமி உமிழும் நச்சுப்பொருளை வடிகட்டித் தனி மைப்படுத்தும் முக்கிய பணியையும் மேற்கொண்டனர்.

இந்த அறிவியல் பின்னணியில்தான், 1890 ஆம் ஆண்டில், எமில் வான் பெஹ்ரிங் தனது ஜப்பானிய ஆய்வுக்கூட்டாளர் டாக்டர் ஷிபாசபுரோ கிடாசாடோவுடன் இணைந்து, டிப்தீரியா கிருமி குறித்த ஆய்வுகளைத் தீவிரப்படுத்தினார்.

அவர்கள் மேற்கொண்ட சோதனையில், டிப்தீரியா கிருமி நச்சுத் திரவத்தைக் கினி எலிகளுக்கு அளித்தனர். எதிர்ப்பாத்ததுபோல, நச்சு தீண்டிய எலிகளில் தொற்று ஏற்பட்டு, பல மரணமடைந்தன. எனினும், சில எலிகள் தப்பிப் பிழைத்தன. இதிலிருந்து ஒரு முக்கியமான ஊகத்திற்கு வந்தனர்: நோய்த் தொற்று ஏற்பட்ட விலங்குகளில், நச்சை எதிர்த்து அழிக்கும் 'நச்சுநீக்கி' (Antitoxin) துகள்கள் உருவாகின்றன. அதன் காரணமாகவே சில விலங்குகள் பிழைக்கின்றன; சிலவற்றில் இந்த 'நச்சுநீக்கி' போதிய அளவு சுரக்காததால், அவை இறக்கின்றன.

இந்த ஊகத்தைச் சோதிக்க, அவர்கள் அடுத்த சோதனையைத் திட்டமிட்டனர். முதலில், கிருமி நச்சை வெப்பத்துக்கு உட்படுத்தி, அதன் கொடிய தன்மையை நீக்கி செயலிழக்க செய்தனர். இந்தப் பலமிழந்த நச்சை ஒரு விலங்குக்குச் செலுத்தினால், அதன் உடல் நோய்க்கிருமி தாக்கியதாகத் தவறாகப் புரிந்துகொண்டு, ஒரு சிறு நோய்த்தொற்றின் அறிகுறிகளைக் காட்டும். இதன் விளைவாக, அந்த விலங்கின் ரத்தப் பிளாஸ்மாவில் 'நச்சுநீக்கி' துகள்கள் சுரக்கத் தொடங்கும்.

இந்த 'நச்சுநீக்கி' துகள்கள் நிறைந்த ரத்தப் பிளாஸ்மாவைப் பிரித்தெடுத்து, நோய்த்தொற்று ஏற்பட்ட மற்றொரு விலங்குக்குச் செலுத்தி ஆய்வு செய்தனர். அங்கு நிகழ்ந்தது ஒரு வியப்பு!

செலுத்தப்பட்ட பிளாஸ்மாவில் இருந்த 'நச்சுநீக்கிகள்', நோய்வாய்ப்பட்ட விலங்கின் உடலில் உள்ள நச்சுகளை எதிர்த்து அழித்தன.



தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவருக்கு உதவிக்கரம் நீட்டுவது போல, இந்த சிகிச்சை நோயாளியின் எதிர்ப்புச் சக்திக்கு வலுசேர்த்து, அந்த விலங்கை விரைவாகக் குணமடையச் செய்தது; தொற்று நோய் முற்றிலுமாக அகன்றது.

இந்த அடிப்படை வழிமுறையைப் பின்பற்றியே, கோவிட்19 தொற்றுக் காலத்தில், முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல, கிருமித் தொற்றிலிருந்து குணமடைந்த ஒருவரின் ரத்தத்தை எடுத்து, அதை மற்றொரு கோவிட் நோயாளிக்கு அளிக்கும் 'நலமடைந்தோர் பிளாஸ்மா சிகிச்சை' (Convalescent Plasma Therapy) பரிசோதிக்கப்பட்டது. கோவிட் நோய்க்கு இது போதிய பலனைத் தரவில்லை என்றாலும், அடிப்படையில் இரு சிகிச்சைகளும் ஒரே வழிமுறையைச் சேர்ந்தவையே.

எலியைக் குணப்படுத்த ஒரு சிறுதுளி நச்சுநீக்கி செறிவான பிளாஸ்மாவே போதுமானது. ஆனால் மனிதர்களுக்கு அளிக்க, கூடுதலான அளவிலும், அதிக செறிவும் கொண்ட 'நச்சுநீக்கி' பிளாஸ்மா தேவைப்பட்டது.

இந்தச் சவாலைச் சந்திக்க, பெஹ்ரிங் தனது சக மருத்துவர் எரிச் வெர்னிக்கேவுடன் இணைந்து, போதிய அளவு 'நச்சுநீக்கி' தயாரிப்பதற்கான ஆய்வுகளை மேற்கொண்டார். முதலில், அவர்கள் பணிபுரிந்த ஆய்வு நிறுவனத்தின் அல்ஜீரிய செம்மறி ஆட்டைப் பயன்படுத்த முயன்றனர். வெர்னிக்கே வீரியமான கிருமி நச்சை அந்த ஆட்டிற்குச் செலுத்தினார். துரதிர்ஷ்டவசமாக, அடுத்த பன்னிரண்டு மணி நேரத்திற்குள், துடித்துத் துடித்து அந்த ஆடு உயிரிழந்தது.

இந்தத் தோல்வி பெஹ்ரிங்கைத் தளரடிக்கவில்லை. தனது சொந்தச் செலவில் மூன்று ஆடுகளை வாங்கி சோதனைகளைத் தொடர முடிவு செய்தார். எந்த அளவு செயலிழக்கச் செய்த நச்சு, போதிய 'நச்சுநீக்கி' சுரப்பைத் தூண்டும் என்பதைக் கண்டறியும் ஆய்வுகளில் ஈடுபட்டார். மற்றொரு ஆய்வுக் கூட்டாளியான பால் எர்லிச்சின் உதவியோடு, போதிய அளவு 'நச்சுநீக்கி' சுரக்கச் செய்யும் உகந்த வழிமுறையை வடிவமைத்தனர்.

ஃப்ரீட்பெர்க் நகருக்கு அருகே உள்ள வெர்னிக்கேவின் பண்ணையில் இரு விஞ்ஞானிகளும் தங்கள் ஆய்வுகளை முன்னெடுத்தனர். ஆடுகளில் வெற்றிகரமான சோதனைகளுக்குப் பிறகு, பெருமளவில் பிளாஸ்மா பெற, குதிரைகளில் ஆய்வுகளைத் தொடங்கினர். இந்த ஆய்வு விலங்குகளைப் பராமரிப்பதில், வெர்னிக்கேவின் காதலி மெட்டா ஃப்யூத் முக்கியப் பங்கு வகித்தார். வெர்னிக்கேவின் வழிகாட்டுதல்படி, செயலிழக்கச் செய்யப்பட்ட கிருமியைக் கொண்டு 'நச்சுநீக்கி' சுரக்கச் செய்து, ரத்த மாதிரிகள் சேகரிப்பதில் மெட்டா ஒரு அர்ப்பணிப்பான ஆய்வு உதவியாளராகச் செயல்பட்டார்.

காசநோய், காலரா மற்றும் ஆந்த்ராக்ஸ் போன்ற கொடிய தொற்றுநோய்களின் மூலக்காரணத்தைக் கண்டறிந்தவரும், நவீன நுண்ணுயிரியலின் முக்கிய நிறுவனர்களில் ஒருவருமான ஜெர்மன் மருத்துவர் ஹென்ரிச் ஹெர்மன் ராபர்ட் கோச் தான் பெஹ்ரிங் மற்றும் வெர்னிக்கே ஆகியோர் பணிபுரிந்த தொற்றுநோய் ஆய்வு நிறுவனத்தின் தலைவராக இருந்தார்.

டிசம்பர் 1891ஆம் ஆண்டில், ராபர்ட் கோச் ஒரு முக்கியமான பரிந்துரையை முன்வைத்தார்: "விலங்குகளில் போதிய அளவு ஆய்வுகள் முடிந்துவிட்டன; இனி மனித நோயாளிகளிடம் இந்தச் சிகிச்சையைப் பரிசோதிக்கலாம்." இந்த அடிப்படையில், எர்ன்ஸ்ட் வான் பெர்க்மேனின் தலைமையில் இயங்கிய சிறார் மருத்துவமனையில் குழந்தை நோயாளிகளிடம் பரிசோதனை நடத்த

திட்டமிடப்பட்டது.

ஆனால், இந்த முன்மொழிவில் போதிய நம்பிக்கை கொள்ளாத பெர்க்மேன், தனது மேற் பார்வையில் மீண்டும் விலங்குகளில் மேலும் சோதனைகள் நடத்தப்பட வேண்டும் எனக் கட் டளையிட்டார். இந்தக் கட்டளையின் பேரில், வெர் னிக்கே மற்றும் அவரது குழுவினர் நச்சுநீக்கி செறிவு மிக்க பிளாஸ்மாவைத் தயாரிக்க முனைந்தனர்.

இந்தப் புதிய சீரத்தை, நோய்த்தொற்றுகண்ட முயல்களில் செலுத்திச் சோதனை மேற்கொண் டனர். சில நாட்களில் நோய் அகன்று முயல் கள் துள்ளிக்குதிக்கும் என எதிர்பார்த்த அவர் களுக்குப் பெரும் ஏமாற்றம் காத்திருந்தது. சோத னைக்கு உட்படுத்தப்பட்ட அனைத்து முயல்களும் இறந் துவிட்டன. பின்னர் கண்டுபிடிப்பது என்னவென்றால், சீரத்தைப் பாதுகாக்கும்போது தவறுதலாக அதிக வெப்பம் அளித்துவிட்டதால், அதில் இருந்த நச்சுநீக்கித் துகள்கள் செய லிழந்துவிட்டன.

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து, குழந்தை களுக்கு இந்த நச்சுநீக்கிச் சீரம் அளிக்கும் சோத னையைப் பெர்க்மேன் முற்றிலும் மறுத்துவிட்டார். பெஹ்ரிங்கும் வெர்னிக்கேவும் மனம் உடைந்த நிலையில் கைப்பிசைந்து நின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் தான், கண்ணீரும் கம்பலையுமாக அந்த அபலைத் தாய், டாக்டர் ஹென்ரிச் கீஸ்லரின் வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டிருந்தாள்.

நள்ளிரவில், பனிபோர்த்தப்பட்ட தெருக்கள் வழியே, பெர்லின் நகரின் விளிம்பில் இருந்த தனது வீட்டிலிருந்து நகர மையத்தில் அமைந்திருந்த மருத்துவமனைக்குக் கீஸ்லர் விரைந்தார்.

இதற்கிடையில், வெர்னிக்கேவும் நச்சுநீக்கி செறிவு மிக்க பிளாஸ்மாவை எடுத்துக்கொண்டு மருத்துவமனை வந்து சேர்ந்தார். டாக்டர் ஹென்ரிச் கீஸ்லரின் மேற்பார்வையில், 1891ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆம் தேதி, அந்தக் குழந்தைக்கு 50நீநீ சீரம் ஊசி மூலம் செலுத்தப்பட்டது. அடுத்த சில நாட்களில் இன்னொரு குழந்தைக்கும் இதே சிகிச்சை அளிக்கப்பட்டது.

டிசம்பர் 25 – கிறிஸ்துமஸ் தினம். பெர்லின் நகரம் முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது.

நச்சுநீக்கிச் சீரம் கொடுத்து முதன்முறையாகக் குணப்படுத்தப்பட்ட அந்தக் குழந்தை, தன் வீட்டில் பெற்றோருடன் மகிழ்ச்சியாகக் கிறிஸ்துமஸ் கொண்டாடியது. அந்தக் கிறிஸ்துமஸ் தினத்தில் நிகழ்ந்த அறிவியல் அற்புதத்தை, உலகம் வியப்புடன் பார்த்து நின்றது.

அடுத்த ஆண்டான 1892இல், முறையான மனித சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. உண்மையில், போதிய அளவு நச்சுநீக்கிச் செறிவு மிக்க பிளாஸ்மா அளிக்கப்பட்டால், அதுவரை மர ணம் உறுதியெனக் கருதப்பட்ட டிப்தீரியாவைக் குணப்படுத்த முடியும் என்பதை அவர்கள் உறுதிப் படுத்தினர். இந்தச் சிகிச்சையின் விளைவாக, ஐரோப்பாவில் அடுத்த சில ஆண்டுகளில் டிப் தீரியாவால் ஏற்பட்ட மரணங்கள் வெகுவாகக் குறைந்தன.

"நோயெதிர்ப்பு சீரம் சிகிச்சைத் துறையில் அவர் ஆற்றிய பணிக்காகவும், குறிப்பாக டிப் தீரியாவை எதிர்க்க அதைப் பயன்படுத்தியமுறைக்காகவும் இப்பரிசு வழங்கப்படுகிறது. இந்தக் கண்டு பிடிப்பு மருத்துவ அறிவியலில் ஒரு புதியபாதை யை உருவாக்கியதோடு, நோய் மற்றும் மரணத்திற் கெதிரான ஒரு பேராயுதத்தை மருத்துவர்களின் கையில் அளித்துள்ளது" என்ற பாராட்டு பத்திரத் துடன் உடலியல் மற்றும் மருத்துவத் துறைக்கான முதல் நோபல் பரிசு, 1901ஆம் ஆண்டில், எமில் அடால்ஃப் வான் பெஹ்ரிங்கிற்கு வழங்கப்பட்டது.





# ஜப்பானில் கொண்டாடப்படும் வைக்கோல் திருவிழா

ஜப்பானின் இலையுதிர் காலத்தையொட்டி நிகழும் நெல் அறுவடை காலத்தில் வரும் கலாச்சார நிகழ்வு... குறிப்பாக Niigata என்ற பிராந்தியத்தில் (Prefecture) உள்ள Honshu தீவுக்குரிய நிகழ்வு இது...

2008தொடக்கம் Niigata Wara Art Festival என்றழைக்கப்படும் வைக்கோல் திருவிழா பிந்திய ஆகஸ்டில் ஆரம்பித்து, ஒக்டோபர் முடியும்வரை தொடரும்.

Wara என்ற ஜப்பானியச் சொல் வைக்கோலைக் குறிப்பது. அறுவடை முடிந்ததும் வயல்வெளிகளில் பரவலாகச் சிதறி இருக்கும் வைக்கோலைச் சேகரித்து, கலைநயத்தோடு, இராட்சத மிருகங்களை உருவாக்குகிறார்கள்..

வீட்டுக் கூரையை மூடுவதற்கும், நல்ல உரமாக்குவதற்கும், கால்நடைகளின் தீனியாகவும் இது மனிதரின் பாவனையில் இருப்பதோடு,.காலணிகள், பைகள் தயாரிப்பிலும், இறந்தவர்களை மூடுவதற்கும் கூட வைக்கோல் ஜப்பானியரின் தினசரி வாழ்வில் வந்து போகின்றது. இன்றைய பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களுக்கு இராட்சத கொரில்லாக்கள், டைனோசரஸ்கள் போன்றவற்றை பலகைச் சட்டத்தில் வைக்கோலைப் பின்னி, சிருஷ்டிக்க முடிகிறது. ஆண்டுக்கு ஆண்டு, வெவ்வுறு மாணவர் குழு, விதம் விதமாக இந்த மிருகங்களை பாரிய பூங்காவொன்றில் காட்சிக்கு வைத்து வருகின்றன..


இந்த வருடம் ஆகஸ்ட் 29இல் ஆரம்பிக்கும் இந்தக் கலாச்சாரக் கண்காட்சி திருவிழா, செப்டெம்பர் 12வரை நீள்கின்றது. இந்தத் தடவை ஒலிம்பிக் குழுவும் இவர்களுக்கு அனுசரணை வழங்குகின்றது..

2017இல், இந்த விழாவின் 10வது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்த நினைவாக, மாணவர்களிடையே ஒரு சவாலாக வழமையான உருவங்களை விட இரட்டிப்பான அளவு பெரிதாக செய்யும்படி உற்சாகப்படுத்தி போட்டிகளும் நடாத்தப்பட்டன.

இது தாய்லாந்து மண்ணில்.

இப்படியான வைக்கோல் உருவங்கள் செய்யும் கலாச்சாரம் , ஜப்பானில் மாத்திரமல்ல தாய்லாந்து போன்ற வேறு நாடுகளிலும் காணப்படுகின்றது....

# யானைகளும் அதன் பற்களும்




யானைகள் பூமியில் உள்ள மிகப்பெரிய விலங்குகளில் ஒன்றாகும், எனவே அவற்றின் பற்கள் மிகப் பெரியவை என்று நீங்கள் இயல்பாகவே கருதுவீர்கள். இருப்பினும், ஒரு யானையைப் பார்ப்பதன் மூலம், நீங்கள் அவற்றைப் பார்க்க முடியாது! அவற்றின் பெரிய தந்தங்களைத் தவிர, அவை முதல் பார்வையில் பற்கள் இல்லாததாகத் தோன்றும். எனவே, யானைகளுக்கு பற்கள் உள்ளதா?

ஒரு யானை அதன் வாயைத் திறக்கிறது. நீங்கள் கூர்ந்து கவனித்தால், அதன் பெரிய கடைவாய்ப்பற்களைப் பார்க்கலாம்!

ஒரு விலங்கின் பற்களின் வடிவம், எண்ணிக்கை மற்றும் அளவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது அதன் உணவு முறைதான். எல்லாவற்றிற்கும் மேலாக, பல்வேறு வகையான உணவுகளை உட்கொள்ள விலங்குகளுக்கு சில வகையான பற்கள் தேவைப்படுகின்றன.

மேலும் யானைகளுக்கு எத்தனை பற்கள் உள்ளன? அவை எப்படி இருக்கும், எவ்வளவு பெரியவை? யானைகளுக்கு என்ன வகையான பற்கள் உள்ளன? என்பதைப் பார்ப்போம்.

ஒரு விலங்கின் பற்களின் வடிவம், எண்ணிக்கை மற்றும் அளவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது அதன் உணவு முறைதான். எல்லாவற்றிற்கும் மேலாக, பல்வேறு வகையான உணவுகளை உட்கொள்ள விலங்குகளுக்கு சில வகையான பற்கள் தேவைப்படுகின்றன. கடைவாய்ப்பற்கள் போன்ற தட்டையான பற்கள் தாவரப் பொருட்களை அரைப்பதற்கு சிறந்தவை, அதே சமயம் கோரைப் பற்கள் போன்ற கூர்மையான பற்கள் இறைச்சி மற்றும் சதையைக் கிழிப்பதற்கு சிறந்தவை.



கடைவாய்ப்பற்கள் போன்ற தட்டையான பற்கள் தாவரப் பொருட்களை அரைப்பதற்கு சிறந்தவை, அதே சமயம் கோரைப் பற்கள் போன்ற கூர்மையான பற்கள் இறைச்சி மற்றும் சதையைக் கிழிப்பதற்கு சிறந்தவை.

யானைகள் முற்றிலும் தாவர உண்ணிகள், எப்போதாவது பூச்சி அல்லது பறவை முட்டைகளைத் தவிர, அவை அதிக அளவு தாவரப் பொருட்களை உண்ணும்போது தற்செயலாக விழுங்க முடிகிறது. இந்தத் தகவலைக் கருத்தில் கொண்டு, இன்றைய யானைகளுக்கு கடைவாய்ப்பற்கள் மற்றும் முன் கடைவாய்ப்பற்கள் மட்டுமே இருப்பதில் ஆச்சரியமில்லை (அவற்றின் தந்தங்களைத் தவிர, அவை உண்மையில் மாற்றியமைக்கப்பட்ட வெட்டுப்பற்கள் அதைப் பற்றி பின்னர்!).

இந்த கடைவாய்ப்பற்கள் மனிதர்களின் பற்களைப் போல மேல் மற்றும் கீழ் தாடைகளிலிருந்து வளர்வதை விட யானையின் வாயின் பின்புறத்திலிருந்து வளர்கின்றன. சொல்லத் தேவையில்லை, அவற்றின் கடைவாய்ப்பற்களும் முன்கடைவாய்ப்பற்களும் மிகப்பெரியவை! ஒவ்வொரு பல்லும் தோராயமாக ஒரு செங்கல் அளவு மற்றும் வடிவம் கொண்டது மற்றும் சுமார் 4.5 பவுண்டுகள் எடை கொண்டது.

யானைகளின் கடைவாய்ப்பற்களில், தாவரப் பொருட்களை மேலும் உடைக்க உதவும் வகையில், அமைப்பு ரீதியான முகடுகள் உள்ளன. ஆப்பிரிக்க யானைகளின் கடைவாய்ப்பற்கள் வைர வடிவிலானவை, அதே சமயம் ஆசிய யானைகள் அதிக உருளை வடிவ முகடுகளைக் கொண்டுள்ளன.

யானைகளுக்கு மொத்தம் எத்தனை பற்கள் உள்ளன?

மொத்தத்தில், ஆப்பிரிக்க மற்றும் ஆசிய யானைகள் இரண்டிற்கும் எந்த நேரத்திலும் 26 பற்கள் இருக்கும். அவற்றின் 12 பற்கள் அகலமான, தட்டையான கடைவாய்ப்பற்கள், மற்றும் 12 பற்கள் சற்று குறுகலான மற்றும் கூர்மையான முன்கடைவாய்ப் பற்கள். மீதமுள்ள இரண்டு பற்கள் உண்மையில் அவற்றின் தந்தங்கள்!

ஒரு குட்டி யானை பிறக்கும்போது, அவற்றுக்கு பால் பற்களும் நான்கு சிறிய கடைவாய்ப்பற்களும் மட்டுமே இருக்கும். பால் பற்கள் "குழந்தை தந்தங்கள்" என்று அழைக்கப்படுகின்றன, மேலும் யானைக்கு சுமார் இரண்டு வயது ஆகும்போது அவை ஒரு பெரிய பற்களால் மாற்றப்படுகின்றன. கடைவாய்ப்பற்களும் அதே வயதில் ஒரு பெரிய பற்களால் மாற்றப்படுகின்றன.

யானையின் பற்கள் தொடர்ந்து அதிக அளவு இலைகள்,புற்கள்,பழங்கள் மற்றும் கிளைகளால்தேய்ந்து போகின்றன. இந்த மென்மையான ராட்சதர்கள் தங்கள் ஆற்றல் மட்டங்களை உயர்த்த ஒரு நாளைக்கு சுமார் 16 முதல் 20 மணி நேரம் சாப்பிட வேண்டியிருக்கும். இதன் விளைவாக, பழைய பற்களுக்குப் பதிலாக புதிய பற்கள் எப்போதும் வளர்ந்து வருகின்றன. ஒரு கடைவாய்ப்பற் அல்லது முன்கடைவாய்ப்பற்கள் தேய்ந்து போனாலோ அல்லது விழுந்தாலோ, முதுகில் இருந்து ஒரு புதிய பற்கள் வளர்ந்து அதை மாற்றும்.இந்தச்



செயல்முறையின் மூலம், யானைகள் ஒரு வாழ்நாளில் மொத்தம் ஆறு செட் பற்களைப் பெறுகின்றன. அதாவது சுமார் 150 பற்கள்!

யானையின் தந்தங்கள் உண்மையான பற்களா?

நாம் முன்பு சுருக்கமாகத் தொட்டது போல, யானை தந்தங்கள் உண்மையில் பற்கள்தான்! அவை பெரிதாக்கப்பட்ட வெட்டுப்பற்கள், அவை யானைகள் மரங்களின் பட்டைகளையும் கிளைகளையும் கிழித்து எறிவதற்கும், தண்ணீரைக் கண்டுபிடிக்க துளைகளை தோண்டுவதற்கும், உணவைப் பெற கனமான பொருட்களைத் தூக்குவதற்கும் நகர்த்துவதற்கும், வேட்டையாடுபவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் உதவுகின்றன.

கூடுதலாக, ஆண் யானைகள் பெரிய தந்தங்களைக் கொண்டிருக்கின்றன, அவை பெரும்பாலும் இனச்சேர்க்கை காலத்தில் போட்டியிடும் ஆண் யானைகளை அச்சுறுத்துவதற்குப் பயன்படுத்துகின்றன. பிரதேசம் மற்றும் உணவுக்காக மற்ற ஆண் யானைகளுடன் சண்டையிடவும் அவை தங்கள் தந்தங்களைப் பயன்படுத்தும்.


சுவாரஸ்யமாக, யானைகள் உயிர்வாழ அவற்றின் தந்தங்கள் அவசியமில்லைஎன்றாலும், அவை இல்லாமல் அவை மிகவும்பல வீனமானவை மற்றும் பல்வேறு ஆபத்துகளுக்கு ஆளாகக்கூடியவை. விந்தையாக, மொசாம்பிக்கில் உள்ள சில பெண் ஆப்பிரிக்க யானைகள் சமீபத்தில் பிறப்பிலிருந்தே தந்தங்கள் இல்லாமல் வேகமாக பரிணமிக்கத் தொடங்கியுள்ளன! இந்தப் பண்பு, அந்தப் பகுதியில் அதிகப்படியான தந்த வேட்டையிலிருந்து யானைகளைப் பாது காக்கும் நோக்கம் கொண்ட ஒரு பாதுகாப்பு பொறிமுறை என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

யானையின் பற்கள் எப்போதாவது தீர்ந்து விடுமா?

ஒரு யானையின் பற்கள் அதன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வளரும் ஒரு அளவிற்கு. ஒரு யானை ஆறு செட் பற்களையும் கடந்து விட்டால், அந்த இடத்தில் மீண்டும் வளராது.

பெரும்பாலான யானைகளுக்கு, நீண்ட ஆயுட்காலம் வாழ போதுமான பற்கள் மட்டுமே உள்ளன. இருப்பினும், 6070 வயதுக்கு மேற்பட்ட யானைகளின் மரணத்திற்கு பல் இழப்பு முக்கிய காரணமாகும். அவற்றின் கடைவாய்ப்பற்கள் இல்லாமல், யானைகளால் உணவை சரியாக மெல்லவும், உடைக்கவும் முடியாது. எனவே, சில சந்தர்ப்பங்களில், ஆறு செட் பற்கள் மட்டும் போதாது.

கூடுதலாக, யானைகள் தங்கள் வாழ்நாள்




முழுவதும் நீடிக்க ஒரு ஜோடி தந்தங்களை மட்டுமே பெறுகின்றன. தந்தங்கள் தொடர்ந்து வளர்ந்தாலும், காலப்போக்கில் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால் அவை அனைத்து வகையான சேதங்களுக்கும் ஆளாகின்றன. அதன் தந்தங்கள் சேதமடைந்தாலோ அல்லது வேட்டைக்காரர்களால் அகற்றப்பட்டாலோ, ஒரு யானை வேட்டையாடுபவர்களுக்கு மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக மாறும், மேலும் உயிர்வாழத் தேவையான பெரிய அளவிலான தாவரப் பொருட்களை அணுகுவதில் மிகவும் குறைவான செயல்திறன் கொண்டது.

# மனிதனின் மிகப்பெரிய பலம்

# நம்பிக்கை!!

நாம் வாழும் வாழ்க்கையை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். நம்பிக்கை நமது மூன்றாவது கை. அதிகாலையில் ஆனந்தத்தோடு கடமைகளை ஆரம்பிப்பவர்களிடம் கேட்டுப் பாருங்கள், சார் எப்படி இருக்கிறீங்க? எனக்கென்ன சூப்பரா இருக்கிறேன் என்பார்கள். அதே போல படுக்கையை விட்டு எழும்ப மனமே இல்லாமல் போர்வையை முகம்வரை இழுத்து போர்த்திக் கொண்டு படுக்கையில் புரளும் சோம்பேறிகளிடம் கேட்டுப்பாருங்கள்.. என்னத்த சொல்ல ஏதோ இருக்கேன் என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள்.

அதிகாலைப் பொழுது ஐந்து மணிக்கே வேப்ப மரத்தில் பறவைகளின் இனிய சங்கீதம் சூரிய உதயத்தை வரவேற்க புதுப் பொழுதை தரிசிக்கப் போகிறோம் என்ற பூரிப்பில் இனிய ராகத்தில் இசைப்பதை கேட்கும் போது மனம் லேசாய் நமக்கு சிறகடிக்கும். வானம் தூரத்தில் இல்லை தொடும் தூரத்தில் தான் உள்ளது என்று மனம் உணரும். ஆனந்தத்தில் அன்றைய பொழுது ஆரம்பிக்கும். காலை விழிக்கும் போதே தன்னம்பிக்கை உள்ளவர்கள் இறைவா இந்த நாள் இனிய நாளாய் ஆவதற்கு நன்றி என்பார்கள்.

தன்னம்பிக்கை இல்லாதவனிடம் உற்சாகம் இருப்பது இல்லை. முகத்தில் சந்தோஷ சுவடைப் பார்ப்பது அரிதிலும் அரிது. எப்படியோ.. இந்த நாளைக் கடத்தி விட்டோம். நாளைய பொழுதாவது நன்றாக அமையாதா? பார்ப்போம் என்பார்கள். அதில் கூட முழுமையான நம்பிக்கை இருப்பது இல்லை.

தன்னம்பிக்கை வளர்வதற்கு முதற் காரணியே தன்னை முழு மனதாக நேசிப்பது தான். நீ குட்டையோ நெட்டையோ கருப்போ சிவப்போ பலவானோ பலவீனனோ அப்படியே உன்னை ஏற்றுக்கொள். மற்றவர்கள் நம்மை விரும்ப வேண்டும் என ஒவ்வொரு மனிதனும் ஆசைப் படுகிறான். ஆனால் தன்னை நேசிக்க மறந்து விடுகிறான். மனிதன் பிறந்தவுடன் தன் தாயை நேசிக்கிறான். பிறகு தந்தையை. சிறிது நாளில் சகோதரர் சகோதரிகளை விரும்புகிறான். பள்ளிப் பருவத்தில் தனது அருகிலுள்ள மாணவனை நண்பனாக்கி அவனையும் நேசிக்கிறான். இளமையில் வாழ்க்கைத் துணையை விரும்புகிறான். பின்பு பிள்ளை பேரன் பேத்தி என நேசிக்கும் வட்டம் பெருகிக்கொண்டே போகிறது. அதுவும் பலம் தான். பிறரை கட்டுப்படுத்தாதவரை நாமும் நேசித்து, பிறரால் உண்மை அன்போடு நேசிக்கப்படும் பொழுது வானம்தொட்டுவிடும் தூரத்திலேயே இருப்பது போல் தெரியும்.



தன்னம்பிக்கை குறைபாடுகள் பெரும்பாலும் நான்கு காரணங் களால் வரலாம். நம்மைப் பற்றி பிறர் எண்ணுவார்களோ.. இக்கட் டான இச்சூழ் நிலையை எப்படி சமாளிப்பது என்ற அச்சம், எதிர்மறை சிந்தனை, மன அழுத்தம்.. நாம் சரியான பாதையில் செல்கிறோம் என்ற தெளிவு ஒரு மனிதனுக்கு இருந்துவிட்டால், மற்றவர்கள் நம்மைப் பற்றி அதை நினைப்பார்களோ இதை நினைப்பார்களோ என்ற எண்ணம் வேரறுத்துப் போகும்.

உலகிலுள்ள அனைத்து மனிதன் முதல் பூமியில் உள்ள ஜீவராசிகள் அனைவருமே இக் கட்டான சூழ்நிலையில் தள்ளபடாதவர்களாக இருக்க முடியாது. இதை உணர்ந்தாலே துன்பக் கடலில் நீந்தி வெளியே வந்துவிடலாம்.

எதிர் மறை சிந்தனையை நேர்மறை சிந்தனை யாக மாற்றுவது ஒன்றும் இமாலய சாதனை அல்ல. உங்களுக்குத் தெரியாத பல நல்ல விஷயங்கள் உங்களிடம் நிறைந்திருக்கும். முதலில் குறிப்பேட்டை எடுங்கள்.. உங்கள் நற் பண்புகளை நீங்கள் முதலில் பட்டியலிடுங்கள். நெருங்கிய நண்பர்கள் உறவினர்களிடம், என்னி டம் பிடித்த விஷயம் ஏதாவது உள்ளதா என்று கேட்டுபாருங்கள்.

அவர்கள் கூறுவதையும் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். பட்டியலிடும் விஷயம் நீண்டு கொண்டே போகும். அட இது நானா? என்று ஆச்சரியம் உங்களை வியக்க வைக்கும். பள்ளிப் பருவ இளம் வயது தோழர்களிடம் பேசுங்கள். பல மகிழ்ச்சியான விசயங்கள் நமது செவியில் இனிய பாடலாக ஒலிக்கும். நாவில் தேனின் சுவை ஊற்றெடுக்கும். இளம் பருவ நினைவுகள் பொன்னேட்டில் பொறிக்க வேண்டிய முத்துக்கள் என்பதை உணருங்கள்.

மன அழுத்தம் இன்று பரவலாக உலகில் நிறைந்துள்ளது. நோய்களில் எழுபத்தி ஐந்து சதவிதம் முதல் தொண்ணுறு சதவிதம் வரை மன அழுத்தத்தாலே வருகிறது. மன அழுத்தத்தின் காரணத்தை எளிதாகக் கண்டு பிடித்து விட இயலாது. ஏமாற்றம், தோல்வி பயம், வேலை இன்மை, வேலைப் பளு, இழப்பு, அதிக சத்தம், அதிக வெளிச்சம் இவை எல்லாம் கூட மன அழுத்தத்தை அதிகப்படுத்தும் காரணிகளாகும்.

மனஅழுத்தத்திலிருந்துவெளி யே வர நமது எதிர்பார்ப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். போதும் என்ற மனமே






பொன்செய் யும் மருந்து. யோகா, தியானம், தெய்வ சிந்தனை, நடைப்பயிற்சி போன்றவை மனதை மென் மையாக்கும்.

தன்னலமற்ற அன்புக் குழந்தை களோடு பேசி விளையாடுவது, செல்லப்பிராணிகளோடுஅன் பாக விளையாடுவது ஆகியவை கூட மன அழுத்தத்திற்கு நல்ல மருந்து. அம்மணமாகப் பிறந்தோம். போகும் போது எதையும் தலையில் தூக்கிக் கொண்டு போகப் போவதில்லை. பின்பு ஏன் மனதை கசக்கிப் பிழிந்து அழுத்தத்தோடு வாழ வேண்டும்.

இரண்டு முக்கிய விஷயங்கள் உள்ளன. ஒன்று நம்மால் மாற்றவே முடியாத விஷயம் இன் னொன்று நாம் முயற்சி செய்தால் மாற்றக் கூடிய விஷயம். இதுவே மகிழ்ச்சியான வாழ்வுக்கு அடிப்படை. கருப்பாகப் பிறந்துவிட்டோம்.

குள்ளமாக இருக்கிறோம் என்று வருத்தப் படுகிறீர்களா? இதை மாற்ற இயலாது. எனவே அதை இறைவன் கொடுத்த பரிசாக முழுமன தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதை மாற்ற நினைத்தால் வாழ்க்கை முழுக்க துயரம் மட்டுமே வரும்.

தண்ணி அடிக்கிறோம், புகை பிடிக்கிறோம் வேறு பல கெட்ட பழக்கத்திற்கு ஆட்பட்டு இருக்கிறோம் என்ற குறைகளெல்லாம் திருத் திக் கொள்ளக் கூடிய குறைகள். இதை திருத் தினால் பெயரும் கிடைக்கும் காசும் மிஞ் சும். என்னால் எதுவும் முடியாது என்று மட்டும் நினைக்காதீர்கள்.

நீ சிற்பி! ஏ.. சிற்பியே.. உன் கைவண்ணம் கல்லிலோ மரத்திலோ இல்லை. உன்னைதன்னம் பிக்கையால் அணு அணுவாகச் செதுக்குகிறாயே, அதிலுள்ளது நீ சிற்பமாகும் ஜால வித்தை. விழித்துப் பார்.. வானம் உன் பக்கத்திலேயே இருக்கும். அதை நீ தொட்டுத் தடவி முகர்ந்து அனுபவித்து மகிழலாம்.

# வித்தியாசமான, விசித்திரமான, விநோத பறவை

மனிதர்களை பெரிய அளவில் ஆச்சரியப் படுத்தி வரும் ஒரு காட்டுப் பறவை பற்றிய விந் தையான சில விஷயங்களைப் பற்றி அலசலாம்?

உங்கள் கேள்விக்கு என் பதிலாக "தாடிக் காரக் கழுகு" (bearded vulture) பற்றிய ஆச் சரியமூட்டும் தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

தாடியுள்ள இந்தக் கழுகின் உணவில் 70 வீதம் தொடக்கம் 90 வீதமான அளவு இருப்பது மிருகங்களின் எலும்புகள் என்பது எவரையும் அதிசயப்பட வைக்கும் உண்மை.

ஆபிரிக்க, ஆசிய, ஐரோப்பிய மலை முகடு களுக்கு மேலாகப் பறந்து திரிவதுதான் இந்த இனக் கழுகு. ஏனைய காட்டு வாழ் விலங்குகள் கொல்லப்பட்ட மிருகத்தின் முழு மாமிசத்தையும் தின்று தீர்க்கும்வரை காத்திருக்கும் இந்தக் கழு குகள், இறுதியில் மிஞ்சும் எலும்புகளை சுவைத்து உண் கின்றன. இறந்த மிருகத்தின் உடல், காட்டு வெயிலில் கிடந்து நோய்களைப் பரப்பாமல், காட்டைச் சுத்தப்படுத்தும் சுற்றுப்புறச் சூழல் பணியில் இவற் றின் பங்களிப்பும் முக்கியம்...

சிறிய எலும்புகளை அப்படியே முழுதாக விழுங்கி விடுகின்றன. பெரியவற்றை இவை சாப்பிடும் முறை விநோதமானது....

எலும்பை வாயில் கவ்விக் கொண்டு, மிக உயரப் பறந்து, அலகிலுள்ள எலும்பை தரையை நோக்கிப் போடுகின்றன. உயரத்தி லிருந்து விழும் வேகத்தில் எலும்பு நொருங்கிச் சிதற, தூளாகிய எலும்பையும், அதனுள் இருக் கும் மஜ்ஜையையும் (marrow) இவை கொத்தி விழுங்குகின்றன. தன் சாப்பாட்டில் ஏறத் தாழ 95 வீதமான எலும்பைக் கொண்டிருக்கும் ஒரே யொரு பறவை இனம் இந்தத் தாடிக்கார கழுகு தான்.

இங்கே ஒரு இதிகாசக் கதையைச் சொன் னால் சுவாரஸ்ஸியமாக இருக்கலாம்.

முன்னொரு காலத்தில் வாழ்ந்த கிரேக்க நாட காசிரியர் Aeschylus என்பவருக்கு ஒரு தடவை ஆருடம் கூறியவர்கள், இவருக்கு மரணம் வானத்திலிருந்து விழும் ஒரு வஸ்துவால்தான் சம்பவிக்கும் என்று கூறியிருந்தார்களாம்.


மரண பயத்தில், இவர் தன் வாழ்வின்பெரும் பகுதியை, திறந்த வெளிகளிலேயே கழித்து வந்தாராம். ஒரு தடவை ஓர் ஆமையைவேட்டை யாடிய ஒரு தாடிக்கார கழுகு, அதைக் கவ்விக் கொண்டு, உயரப் பறந்து போயிருக்கின்றது. ஒரு பாறாங் கல்லின் மீது ஆமையைப் போட்டு உடைக்க எண்ணி, அதன் கண்கள் கல்லைத்



தேடியிருக்கின்றன. அப்பொழுது வழுக்கைத் தலை மேலே தெரிய, Aeschylus உட்கார்ந்திருந்ததைக் கண்டிருக்கின்றது.

குறிபார்த்து ஆமையைப் போட, ஆமையோடு சேர்ந்து, உட்கார்ந்திருந்தவர் தலையும் நொருங்கியதாம்.

ஆருடமும் பொய்க்காமல் நாடகாசிரியர், பரலோகம் போய்ச் சேர, ஆமையின் ஓடு நொருங்கி, கழுக்கு உணவாயிற்று என்பதுதான் அந்த இதிகாசக் கதை.....




கதை பொய்யோ மெய்யோ என்பது ஒருபுறம் இருக்க, தாடிக்கார பிணந் தின்னிக் கழுகுகள் இப்படித்தான் சாப்பிடும் என்பது தெளிவாகவே நமக்கு புரிகின்றது.

ஒரு செம்மறி ஆட்டின் அளவு மிருகத்தின் உடல் எலும்புகளை, இதனால் சர்வசாதாரணமாக முழுங்க முடியும் என்கிறார்கள்.

கால் நகங்களால் பற்றிப் பிடித்து, அலகால் கொத்தி உடைக்குமளவிற்கு, அலகோ, கால்நகங்களோ பலமானவையாக இல்லை. இதனால் தான் தன் கூரிய கண்களால் தரையிலுள்ள ஒரு பெரிய கல்லைக் குறிவைத்து,எலும்பைப் போடுவதுண்டு. குறி தவறினால் விட்டுவிடுவதில்லை. எலும்பு நொருங்கும்வரை தன் முயற்சியைத் தொடரும் விடாக்கண்டன் கொடாக் கண்டன் இந்தப் பறவை!

அட இப்படி எலும்புகளை விழுங்குகிறதே..இதற்கு அஜீரணம், வயிற்றுக் கோளாறு எல்லாம் வராதா என்று முணுமுணுப்பது என் காதில் கேட்கிறது.

நியாயமான சந்தேகந்தான்.

இதனுடைய சமிபாட்டு உறுப்பில் மிகவும் சக்தி வாய்ந்த அமிலம் சுரந்து கொண்டு இருக்கின்றதாம். 24 மணி நேரத்தில் எந்த எலும்பையும் மலக் கழிவாக்கி விடும் சக்தி இதற்கிருக்கின்றதாம்.!!!!!!!

இந்தக் கழுகுகளின் குஞ்சுகளுக்கும் எலும்புகள்தான் சாப்பாடா?

இல்லை,மாமிசத்தை அல்லது எலும்புகளில் ஒட்டியிருக்கும் கொழுப்பைக் கொடுத்தேகுஞ்சுகளை இவை வளர்க்கின்றன. மாமிசம் இருக்க எதற்கு எலும்புகளையே சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றன.?

அதற்கும் பதில் இருக்கின்றது.

எல்லா மிருகங்களுமேமாமிசத்தையே தேட, மிஞ்சும் எலும்புகள் அனாதைகளாகத் தேங்கி விடுகின்றன. நினைத்த நேரம், நினைத்த இடத்தில் எலும்புகளைத் தேடமுடிவ தால், எப்பொழுதுமே உணவு இந்தப் பறவைகளுக்கு தயார் நிலையில் இருக்கின்றன........

இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், சமயா சமயங்களில், செம்மண்ணின் உதவி கொண்டு, தமது சிறகுகளுக்கு சாயமூட்டி, ஏனைய பறவைகளின் முன்னர் நான் ஒரு ராஜாவாக்கும் என்ற செய்தியை இது பரப்ப முயல்வதுதான்....

இப்படியான செயற்பாடுகள்தான் வித்தியாசமான, விசித்திரமான, விநோதமான பறவை என்று இதைச் சொல்ல வைக்கின்றன.





# அதிர்ச்சியூட்டும் உண்மைப் பேய்கள்

டாக்டர் கென்னத் வாக்கர் உலகப் புகழ் பெற்ற மருத்துவ மேதை. நியூரோ சர்ஜன். இன்றைய பிரபல சர்ஜன்களுக்கெல்லாம் பீஷ்மர் போன்றவர். சாமான்யர்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அவர் எழுதி 'The Story of Medicine' போன்ற மருத்துவ மற்றும் மனோதத்துவ புத்தகங்கள் நிறைய உண்டு. குறிப்பாக, ஆவிகளைப் புரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார் அந்த டாக்டர்.

The Un- conscious Mind என்ற அவருடைய புத்தகத்தில் Appartions என்கிற அத்தியாயத்தில் விவரிக்கப்படும் ஆவி இது!

வாக்கரின் மிக நெருங்கிய நண்பர் டாக்டர் ரோவல். மூடநம்பிக்கைகள் எதுவும் இல் லாத, ரொம்ப பிராக்டிகலான மனிதர் அவர். லண்டனில் உள்ள மிகப்பெரிய மருத்துவ மனை ஒன்றில் பணிபுரியும் ரோவல், கென்னத் வாக்கரிடம் விவரித்த நிகழ்ச்சி இது!

மிகவும் சிம்பிளான ஆவி இது! வாக்கர், இது பற்றி புத்தகத்தில் எழுதியதற்கான கார ணத்தை அவரே குறிப்பிடுகிறார் 'டாக்டர்

ரோவல் என் நீண்டகால நண்பர். பொய் சொல்லிக் காலை வாரிவிடுபவரோ, அதிகப்படி யாகக் கற்பனை செய்து திரித்துச் சொல்பவரோ இல்லை. அவர் ஒன்றைப் பார்த்தால் நான் பார்த்த தைப்போல!'

டாக்டர் ரோவல் விவரித்தது இதோ அப்படியே!

'மதியம் 12 மணி அடிக்க இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன. என் ரவுண்ட்ஸை முடித்துக்கொண்டு (செயிண்ட் ஃப்ரையாஸ் ஆஸ்பத்திரியிலிருந்து பக்கத்தில் உள்ளமெடிக் கல் ஸ்கூலுக்கு நடந்தேன். இரண்டு கட்டடங் களையும் இணைக்கும் பாலம் போல ஒரு வராண்டா உண்டு. நான் அதில் நடந்து சென்ற போது எதிரே ஒரு நர்ஸ் மெல்ல நடந்து வந்தார்.

வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். மருத்துவ மனையின் யூனிஃபார்ம் வெளிர் நீலத்தில் வெள்ளைப் புள்ளிகள் கொண்ட உடையை அணிந்திருந்த அவரை நான் அதுவரை அந்த ஆஸ்பத்திரியில் பார்த்ததில்லை. நான் அருகில் சென்றபோது சற்று ஒதுங்கிய அவரைப் பார்த்து, நாகரிகம் கருதி என் தொப்பியைத் தொட்டு மரியாதை காட்டினேன். அவரும் மெல்லத் தலையசைத்து விட்டு என்னைத் தாண்டிச் செல்ல, எனக்கு ஏதோ பொறி தட்டியது. அவர் அணிந்திருந்த யூனிஃபார்மில் ஏதோ மாறுதல். கைப்பகுதி சற்று பழைய ஸ்டைலாக (old fash- ioned) இருந்தது. அது நீளமான வராண்டா.

அந்த நர்ஸ் என்னைத் தாண்டி சில அடிகள் கூடப் போயிருக்க முடியாது. சரேலென்று நான் திரும்பிப் பார்த்தபோது, அங்கே நர்ஸ் இல்லை. இருபுறமும் தோட்டம். சத்தியமாக அதற்குள் அவர் எங்கேயும் போயிருக்க முடியாது.

அதாவது, கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டார் என்பது தான் உண்மை! எனக்குப் பயம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், திடீரென்று ஒருவர் எப்படி முழுசாக மறைய முடியும்? வியப்புணர்வுதான் நிறைய இருந்தது. மாணவர்களுக்கு ஒரு லெக்சர் தரவேண்டியிருந்தது. அதை முடித்து விட்டு, லஞ்ச் சாப்பிட்டுவிட்டு மறுபடி ஆஸ்பத்திரிக்குப் போனேன். வழியெல்லாம் என் கண்கள் அலைபாய்ந்தன. தலைமை மேட்ரனைத் தேடினேன். அவர் இல்லாததால் மற்ற சீனியர் நர்ஸ்களை ஆபீஸ் அறைக்கு அழைத்தேன். 'சுமார் 50 வயதுள்ள சற்றே நீளமான மூக்கோடு கூடிய நர்ஸ் இங்கே பணிபுரிகிறரா? என்று நான் ஆரம்பித்த உடனேயே அங்கே ஓர் இறுக்கமான மௌனம் நிலவியது. பிறகு உதவித் தலைமை மேட்ரன் மெல்லிய குரலில் கேட்டார். 'டாக்டர், எட்டாம் நம்பர் வார்டு சிஸ்டரைப் பார்த்தீர்களா?'

மேலும் விசாரித்ததில், ஐந்தாறு நர்ஸ்கள் 'அதை'ப் பார்த்திருக் கிறார்கள் என்று புரிந்தது. எல்லோரும் ஒரே மாதிரி அடை யாளங்கள் சொன்னார்கள். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு இன்னொரு பணியாளர் மெதுவாகச் சொன்னார். 'டாக்டர்! பெரிய பிரச்னையாக இருக்கிறது. எட்டாம் நம்பர் வார்டில் (வார்டு) டியூட்டிக்குப் போக எல்லோருமே தயங்குகிறார்கள். பகல், இரவு என்றில்லை. சற்று கூட்டமில்லாமல் அமைதி யான நேரத்திலெல்லாம் குறுக்கும் நெடுக்குமாக அந்த நர்ஸ்! ஆகவே, நாங்கள் தனியாக அந்த வார்டில் உட்காருவதைத் தவிர்க்கிறோம்' என்றார்.

என்னைப் போலவே இன்னும் சில சீனியர் மருத்துவர்கள் அந்த நர்ஸை நேருக்கு நேர் பார்த்திருக்கிறார்கள். அப்படி ஒருவ ரான, ரிட்டயர் ஆகிவிட்ட டாக்டர் ப்ராங்க் என்பவர் வீட்டுக்குப் போய் இது பற்றிக் கேட்டேன். டாக்டர் ப்ராங்க் தானும் அந்த நர்ஸைப் பார்த்ததாக ஒப்புக்கொண்டார். அவர் பார்த்தது மாலை 6 மணி லேசாக இருட்ட ஆரம்பித்த நேரம். ப்ராங்க் பார்த்ததும் அதே வராண்டாவில்தான். சில வித்தியாசங்கள் இருந்தன. அந்த நர்ஸ் சற்று வேகமாக நடந்து வந்த தாகவும், முகத்தில் ஏதோ கலவரம் படிந்திருந்ததாகவும், தன்னைநோக்கி வரும்போதே, கண்ணெதிரே 'பளிச்' சென்று மறைந்து போனதாகவும் சொன்னார் ப்ராங்க்!

இத்தனையும் டாக்டர் ரோவல், கென்னத் வாக்கரிடம் சொன்ன விஷயங்கள்.

ஆக, யாருக்கும் பிரச்னையேற்படுத்தாத எளிமையான ஆவி என்பது இதுவே!

டாக்டர் வாக்கரின் விளக்கப்படி, ஆவிகளுக்குக் கால்கள் தெரியாது என்பதும், அது தரையிலிருந்து சில அங்குலங்கள் உயரத் தில் மிதந்து வரும் என்பதும் தவறான கருத்து. 'எட்டாம் வார்டு சிஸ்டர் நன்கு தரைபதிய நடந்து வந்தார். புகை மண்டலமெல்லாம் இல்லை. உடம்பின் அவுட்லைன், மூக்கு, கண்கள் எல்லாம் தெளிவாக, 'ஷார்ப்'பாக இருந்தன. அதைவிடப் பெரிய விஷயம், நர்ஸ் நடந்து வந்தபோது மெலிதாக அவருடைய நிழலும் வராண்டாவில் கூடவே வந்தது!' என்கிறார் அந்த டாக்டர்.

ஒரே ஒரு நர்ஸ் டாக்டரிடம் சொன்ன பின்னணிக் கதையான 'அந்த நர்ஸுக்கும் மேலதிகாரி களுக்கும் ஏதோ வாக்குவாதம் ஏற்பட ஒரு தலைமை டாக்டர் கடுமையாக நர்ஸிடம் ஏதோ சொல்ல, சென்ஸிடிவ் டைப்பான அந்த நர்ஸ் மனம் உடைந்து ஓடிப்போய் அந்த ஆஸ்பத்திரியின் நாலாவது மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்ட கதை இப்போது தேவையில்லை.

– சின்னா



# முற்பகல் செய்யின்

நன்கு ஆழமாக யோசித்துப் பார்த்தாள் கோமதி. கடைசிவரைப் புரியவில்லை.


"அம்மா கொஞ்சம் பூ வாங்கிக்க மா" பூ விற்பவர் கேட்க

"இருக்குப்பா. நாளைக்கு வாங்கிக்கறேன்" என்று சொல்லிவிட்டு நடந்தாள்.

ஏழரை மணிக்கு வீட்டுக்கு வந்தபோது மனமும் உடலும் சோர்ந்திருந்தது.

"குளிச்சிட்டு வரியாமா, டிபன் எடுத்து வைக்கட்டுமா? அம்மா கேட்டாள்.

"இதோ ஒரு அஞ்சு நிமிஷம் மா" என்று சொல்லி அம்மா கொடுத்த காபியை குடித்துவிட்டு கோமதி குளியலறைக்குள் சென்றாள்.



எத்தனை குவளை தண்ணீர் விட்டுக் கொண்டாலும் உள்ளக் கொதிப்பு அடங்கவில்லை. வெளியில் வந்து உடுப்பு மாற்றிக் கொண்டு வந்து அமர்ந்தாள். அம்மா கொடுத்த இட்லி, சட்டினியைச் சாப்பிட்டு விட்டு அப்பாவின் அறைக்குள் சென்று "கிளம்பட்டுமாப்பா?" என்றாள்.

"சரிம்மா, பார்த்து போமா. கடவுள் இருக்கான். பார்த்துப்பான். நம்ப கையில ஒன்னுமில்ல" என்றார்.

"எப்பிடிப்பா? எப்பிடி முடியுது ஒங்களால? எனக்கு ஒன்னுமே புரியலப்பா" என்றாள்.

"எல்லாம் விதிம்மா. நான் நெனச்சுக்கூடப் பாக்கல. அவனுக்கு எப்பிடி மனசு வந்ததுன்னு தெரில பாப்போம். நீ ஆபீசுக்கு போய்ட்டு வாமா" என்றார்.

அன்று ஸ்கூட்டரை எடுக்கவில்லை. ராபிடோ புக் செய்து கொண்டாள். மனம் ஏனோ ஒரு நிலையில் இல்லை. பதினோறு மணிக்கு டீ டைமில் எழுந்து போய் முகம் அலம்பிக் கொண்டு டீயும் இரண்டு பிஸ்கட்டும் சாப்பிட்டாள்.

மாலையில் ஆபீஸ் முடிந்ததும் மோஹனாவுடன் சேர்ந்து அருகில் இருக்கும் பார்க்கிற்கு சென்றாள். நடந்தவற்றைச் சொன்னாள். "என்ன கோம் சொல்ற? நிஜமாவா? காலைலேந்தே பாத்தேன். நீ எப்போதும் போல இல்லை. என்னப்பா இது?

ஆச்சர்யமா இருக்கு?" மோஹனா.

"ஆமாம் மோஹி, வீட்ல அப்பாவையும் அம்மாவையும் பாக்க முடில. ஒடஞ்சுப் போயிட்டாங்க. நா என்ன செய்யப் போறேன்னு தெரில" என்றாள் கோமதி.

"பொறுமையா யோசிச்சு பேசு. ஒங்கண்ணனுக்கு புரியவை. என்ன சொல்றதுனு தெரியலியேப்பா" மோஹனா சொன்னாள்.

மாலை வீடு திரும்பியதும் கோமதி கொஞ்சம் நிதானித்து அண்ணனுக்கு போன் செய்தாள்.

"என்ன பரத் எப்பிடி இருக்க? என்ன பன்ற?

"நா பன்றது இருக்கட்டும். நீங்க என்ன முடிவு பண்ணினீங்க? அதப்பத்தி மட்டும் பேசு" என்றான்.

"அதான் அது வந்து அப்பாவுக்கு அந்த ஜுரத்துக்கப்புறம் வலது பக்கம் முழுசுமேவராம போயிடுச்சு. வேலைக்கும் போகல. படுத்த படுக்கையா ஆயிட்டாரு. ஏதோ ஒருட்ரீட்மென்ட் பண்ணிக்கிட்டே இருக்கோம்.

ஆக்சுவலா எனக்கு கல்யாணத்துக்கு எடுத்து வச்சதிலேந்துதான் செலவு பண்றேன். இப்பப் போய் நீ இப்படி சொல்ற. அப்பா நீ வந்து பாக்கணும்னு ஆசைப்படறார்" கோமதி சொல்லி முடிப்பதற்குள் இடைமறித்து,

"யார் செலவு பண்ணுவா? இவரை வந்துப் பார்த்து என்ன ஆகப்போகுது? ஆக வேண்டியதைப் பாருங்க மொதல்ல" என்றான்.

அப்படி என்னதான் கேட்டான் பரத்? நன்கு படித்து பட்டம் வாங்கி வெளிநாட்டு வேலை, செட்டிலாகியிருந்தான்.

வீட்டிற்கு பணமெல்லாம் அனுப்பவில்லை. இவன் படிப்புக்காக வாங்கிய கடனை கூட அப்பாவை அடைக்கச் சொல்லிவிட்டான்.

இரண்டு வருஷமாகிறது. வெளிநாட்டுமோகம், அங்கேயே வேற்று மதத்தை சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

பெற்றோர்களுக்கு எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் தான் மிஞ்சியது. தற்போது சொத்தில் பங்கு கேட்டு நச்சரிக்கிறான்.

கோமதியின் அப்பா வக்கீலுக்கு போன்செய்து வரவழைத்து சிலவற்றைச் செய்யச் சொன்னார்.


எதுவும் தெரியாத நிலையில் கோமதி ஒரு முடிவெடுத்தாள். தான் திருமணம் செய்து கொள்ளாமல் கடைசிவரை அப்பா அம்மாவைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

வக்கீல் சொன்ன செய்தி இடி விழுந்தாற் போல் ஆனது பரத்திற்கு.

அவனது அப்பா சொத்து, வீடு, நிலம், நகைகள், பொருட்கள் என எல்லாவற்றையும் கோமதியின் பெயருக்கு மாற்றி எழுதி வைத்துவிட்டார். தங்கை கோமதியைத் தாறுமாறாக அவமதித்துப் பேசி விட்டான். சுடு சொற்களை வீசினான்.

கோபம் முழுவதும் கோமதி மேல் பாய்ந்தது. கோமதி அவன் கோபம் ஜாஸ்தியானதும் "நீ செஞ்சது, ஒனக்கே வந்துது" என்று சொல்லி போனை கட் செய்து விட்டாள்.

– வி.பிரபாவதி



# உண்ணும் உணவில்
# மாற்றம் தேவை

நாம் உண்ணும் உணவில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் தினசரி இட்லி தோசை சோறு போன்றவற்றை தவிர்க்க வேண்டும் வாரத்திற்கு ஒரு நாள் அல்லது பத்து நாட்களுக்கு ஒரு நாள் என எடுத்துக் கொள்ளலாம்

ரத்தத்தில் சர்க்கரையை அதிக அளவு சேர விடாத உணவுகளை உட்கொள்வது உடலுக்கு நல்லது.

ஆராய்ச்சியின் முடிவில் கொண்டைக்கடலை மிகவும் நல்லது இது சர்க்கரையை அளவைஉடலில் சேர விடாது. இரண்டாவது இடத்தில் கோதுமை ரவை உப்புமா இடம்பெறுகிறது. இவை உணவு ஆராய்ச்சி மூலம் நமக்குத் தெரிய வருகிறது.

வேகவைத்த உருளைக்கிழங்கை சாப்பிட்டால் அடுத்த அரை மணி நேரத்தில் அதில் உள்ள மாவு சத்து முழுவதும் ரத்தத்தில் கலந்து விடும்

குறைந்த கிளைசீமிக் உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முட்டை நிலக்கடலை பாதாம் சுண்டல் காய் கறிகள் சூப் வகைகள் பல வகைகள் சிறந்த உணவாகும்.

காலை உணவில் இட்லியை காண வில்லை என தேடக்கூடாது.

வாரத்துக்கு ஒரு நாள் சாப்பிட லாம் அதுவும் வெள்ளை நிறத் தில் இல்லாமல் இருக்க வேண்டும்.

கம்பு சோளம் கேப்பை கோதுமை மாவில் இவற் றை இட்லி செய்து சாப்பிடலாம். மாப்பிள்ளை சம்பா அரிசியில் நிறைய சத்துக்கள் உள்ளன

இந்த வகை அரிசியில் உடலுக்கு மிகுந்த நன் மை பயக்கும். மாதுளை சிவப்பு கொய்யா தக்காளி போன்றவை கேன்சரை தடுக்கும் ஆற்றல் உள்ளது. தினசரி உணவில் சிவப்பு நிற காய்கறிகள் பழங்கள் இடம்பெறுவது அவசியமாகும்

மாப்பிள்ளை சம்பா அரிசி கருப்பு கவுனி மூங் கில் அரிசி போன்றவற்றையும் கோதுமை கேப்பை ரவை கம்பு சோளம் ஆகியவற்றையும் உணவாக தயாரித்து சாப்பிடுவது சிறந்தது.

வெள்ளை உணவுப் பொருட்களான இட்லி தோசை சோறு இவற்றை தவிர்க்க வேண்டும்.

நம் உடல் ஆரோக்கியத்தை பேணி பாதுகாப்பது அவசியமாகும்.

ரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் இதுவே உடல் ஆரோக் கியத்திற்கு மிகவும் நல்லது.

**– நடேஷ் கன்னா**
**கல்லிடைக்குறிச்சி**





# அப்பா?

"விமலா ஜில்லுன்னு ஒரு கிளாஸ் தண்ணி; அப்புறம், சூடா ஒரு கப் காபி கொடு.”

தண்ணீரையும், காபியையும் கொண்டு வந்து வைத்தாள் விமலா.

“விமலா அப்பா ஏன் கொல்லைப் புறத்தில் உட்கார்ந்து இருக்கார்?”

”ம் நீங்களே கேளுங்க அந்த கண்றாவியை.”

காபியை ஒரே மடக்கில் குடித்தவன், தந்தையின் அருகில் வந்தான். அவரது தோளை ஆதரவாக பற்றினான்.

“அ ப் ப ா எழுந்திரிச்சு



உள்ளே வாங்க.” தந்தை யின் கையை மென்மையாக பிடித்து அழைத்து வந்து, சோபாவில் அமர்த்தினான்.

“ஏம்பா என்னமோ மாதிரி இருக்கீங்க?”

அவர் சொல்லத் தயங்கினார்.

“எதுவா இருந்தாலும் சொல்லுங்கப்பா.”

“அவர் சொல்ல மாட்டார் நானே சொல்றேன் கரண்ட் பில்லும், ஸ்கூல் பீசும் கட்டிட்டுவாங்கன்னு குடுத்த, பத்தாயிரம் ரூபாயை தொலைச்சுட்டு வந்து நிக்கறார்.

கேட்டா, “எங்கே வெச்சு தொலைச்சேன்னே தெரியலைமா’ ன்னு சொல்றார்.”

அவர் முகத்தைப் பார்க்க பாவமா இருந்தாலும், 10 ஆயிரம் ரூபாய் போனதில், அவனுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

விமலா மேலும், அவனை சூடேற்றினாள்

“இந்த அளவுக்கு அஜாக்கிரதையும்,பொறுப்பில்லாமையுமா ஒருத்தர் இருப்பாங்க. இவர், பேங்கில வேறெ கேஷியரா இருந்தாரு. எப்படித்தான் இத்தனை காலம் கேஷியர் வேலை பார்த்தார்னே தெரியலை.”

”விமலா நீ கொஞ்சம் பேசாம இரு. நான்தான் விசாரிச்சிட்டு இருக்கிறேன்ல்ல.”

”எங்க வெச்சுப்பா தொலைஞ்சிச்சு?” தந்தையிடம் கேட்டான் கதிரேசன்.

”அதுதாம்பா எனக்கும் புரியலை. விமலா கிட்டே பணத்தை வாங்கிட்டு, ஈ.பி., ஆபீசுக்கு போயிட்டு இருக்கும் போது, நம்ம எதிர்த்த வீட்டு ரிட்டையர்டு போஸ்ட் மாஸ்டர் சேஷாத்ரியை வழியில பார்த்தேன்.

அவரும், ஈ.பி., ஆபீசுக்கு தான் போறேன்னு சொன்னதும், நானும், அவருமா பேசிட்டே நடந்து போனோம். அங்க ஒரே கூட்டமா இருந்தது.

கூட்டம் குறையட்டும்ன்னு, நானும், அவருமா ஒரு மர நிழல்ல உட்கார்ந்தோம். தாகமா இருக்குன்னு, ரெண்டு பேரும், ஆளுக்கு ஒரு இளநியைகுடிச்சிட்டு, நானே காசைக் குடுக்கலாம்ன்னு திரும்பிப்பார்த்தா, “பேக்’கை காணோம். கடைசியில, இளநீருக்கு போஸ்ட் மாஸ்டர் தான் காசை கொடுத்தார்.”

"அந்த இளநீர்க்காரன் எடுத்திருப்பானோ!"

"இல்லப்பாஞ் அவன் என் முன்னாலதான் இருந்தான். பின்னால, இருந்த வேற யாரோ தான், எனக்குத் தெரியாம எடுத்திருக்காங்க." விமலா குறுக்கிட்டாள்.

"பணப்பைய யாராச்சும் பின்னால வைப்பாங்களா? சுத்த கோமாளித்தனமா இருக்கு.


சொந்தமா சம்பாத்தியம் இருந்தாத்தானே, காசோட அருமை தெரியும். என்னோட புருஷன் சம்பாதித்ததை, வேறெ எவனோ திங்கணும்ன்னு விதி."

"இந்த ஒரு தடவை தானம்மா இப்படி நடந்திச்சு. ரிட்டையர்டுஆனதுக்கப்புறம், இத்தனை நாளா, நான்தானே கஷ்டப் பட்டுட்டு வர்றேன். அப்பெல் லாம், ரொம்ப ஜாக்கிரதையாத்தானே இருந்தேன்."

"ஒரு தடவை தொலைத்தாலும், மொத்தமா, 10 ஆயிரம் ரூபா சர்வ ஜாக்கிரதையாத்தான் இருக்கணும். அங்க, என்னோட வேலைபார்த்த வங்க நின்னுட்டு இருந்தாங்க. இங்க, என்னோட சிநேகிதனை பார்த்தேன்னு சொல்லி, நாள் முழுக்க வெட்டிப் பேச்சு பேசிட்டு நிற்கக் கூடாது," என்று பொரிந்து தள்ளினாள் விமலா.

"விமலா கொஞ்சம் மரியாதை குடுத்து பேசு. என்ன இருந்தாலும், அவர் என்னோட அப்பா."

"ஆமா நீங்க தான் மெச்சிக்கணும். சும்மா தானே வீட்டில இருக்காரு. காலைலயும், சாயந் தரமும் குழந்தைகள ஸ்கூல்ல கொண்டு விடச் சொன்னா, "வயசான காலத்தில என்னால முடிய லை'ன்னு வயசை ஒரு சாக்காவெச் சிட்டு, ஜகா வாங்கிக்கிறது; உருப் படியா பண்ணிட்டு இருந்தது, ரேஷன்ல பொருள் வாங்கறதும், கரன்ட் பில், ஸ்கூல் பீஸ்



கட்டறதும் தான். இனி, இந்த ஒரு காரணத்தை வெச்சு, இந்த வேலை யிலிருந்தும் ஜகா வாங்கிக்கலாம்ல்ல.''

கதிரேசன் குறுக்கிட்டான்.

“விடு விமலா அவருக்கு முடியலைன்னா, நானோ, நீயோ போயி கட்டிட்டு வந்திடலாம். இதுக்குப் போயி''

“ஆமா, நானோ, நீங்களோ போயி எல்லா வேலையும் செஞ்சிட்டு வந்திடலாம். இங்கே, இந்த பெரிய மனுஷன், நல்லா சாப்பிட்டுட்டு, அந்த கோவில், இந்த கோவில்ன்னு சுத்திட்டு வரட்டும். நேரத்திற்கு சமைச்சுப் போடத்தான் நான் இருக்கேன்ல.''

''ஏய் இப்ப என்ன பண்ணனும்ங்கற?'' எரிச்சலுடனேயே கேட்டான் கதிரேசன்.

“எம்மேல ஏன் எரிஞ்சு விழறீங்க? கொஞ்ச நாள், உங்க தங்கச்சி வீட்டில கொண்டு போயி விடுங்க. அப்பத்தான்; நம்ம வீட்டோட அருமை தெரியும்.''

''என்ன மாப்பிள்ளே ஏதோ, சூடான விவாதம் போல தெரியுது சிவபூஜைல கரடி நுழைஞ் சிருச்சோ கேட்டபடியே வீட்டினுள் நுழைந்தார், விமலாவின் தந்தை சிவராமன்.

''அப்பா வாங்கப்பா இந்த, வேகாத வெயில்ல ஏம்பா நடந்து வந்தீங்க? ஒரு ஆட்டோ புடிச்சா, பஸ் ஸ்டாண்டிலிருந்து, நம்ம வீட்டிற்கு மிஞ்சிப் போனா, நாற்பதோ, ஐம்பதோ கேட்பான்.''

''நடக்கிறது உடம்புக்கு நல்லதுதானேம்மா. சரி...சரி இந்த பையில பழங்களும், சிப்சும் இருக்கு. குழந்தைகள் வந்தா குடு. மொதல்ல, இதை போயி உள்ளே வெச்சிட்டு வா.''

பையை கிச்சனில் வைத்து விட்டு, தந்தைக்கு லெமன் ஜூசை எடுத்து வந்தாள் விமலா.

"அப்பா இந்தாங்க, “ஜில்'லுன்னு குடிங்க.''

“அதை இப்படி வெச்சிட்டு இந்தப் பக்கம் வாம்மா!'' ஜூஸ் நிரம்பிய கிளாசை, மேஜையின் மேல் வைத்து விட்டு, தந்தையின் அருகில் வந்தாள் விமலா.

“என்னப்பா?''

இரண்டு உள்ளங்கையையும் ஒன்றோடு ஒன்று நன்றாக தேய்த்து சூடாக்கி, “பளார்'என்று, தன் மகளின் கன்னத்தில் அறைந்தார் சிவராமன்.

சிவராமனின் ஐந்து விரல்களும், விமலாவின் கன்னத்தில், அச்சு பதித்தாற்போல் பதிந்தன.

விம்மி அழுது கொண்டே, ''என்னப்பா'' என்றாள் விமலா.

கதிரேசனும், ராமநாதனும் அதிர்ச்சியுடன் சிவ ராமனையே பார்த்தனர்.

"மாமா வந்து'' என்று வார்த்தை கிடைக்காமல் திக்கினான் கதிரேசன்.



"நான் வந்து இருபது நிமிஷம் ஆச்சு மாப்பிள்ளே. பொண்டாட்டி பேச்சுக்குமதிப்புகுடுக்க வேண்டியதுதான். தப்பில்ல. ஆனா, எந்த காலத் திலேயும், எந்த நேரத்திலேயும், தன்னைப் பெத்தவங் களையும் விட்டுக் குடுக்கக் கூடாது. குடும்பத்தில் முதல் மரியாதை அவங்களுக்குத்தான். அதுவும் அவுங்க மனைவிய இழந்தவங்க.. அதுக்கப் புறம்தான் பொண்டாட்டி, குழந்தைகள்..

நீங்களோ, சம்பந்தியோ அவளை அடிச்சா, புருஷன் வீட்டில எல்லாருமா சேர்ந்து, என்னை கொடுமை பண்ணறாங்கன்னு இவ போலீஸ்ல கம்ப்ளைன்ட் குடுக்கலாம். ஆனா, நானேரெண்டு சாத்து சாத்தினா, எவன் கேட்கப் போறான்?

நான் வர்றேன் மாப்பிள்ளே, வர்றேன் சம்பந்தி.

காத்தால நடக்கும் போது, அப்படியே நம்ம வீட்டுக்கும் அடிக்கடி வாங்க. கொஞ்ச நேரம் ஜாலியா பேசிட்டு இருக்கலாம்,'' என்று கூறிய படியே, நடையைக் கட்டினார் சிவராமன்.

"அப்பா'' என அழுதபடியே கூப்பிட்டாள்விமலா.

"என்னம்மா?''

“இந்த ஜூசையாவது குடிச்சிட்டு போங்கப்பா''

இந்த வீட்டை கட்டிக் காத்து உன் கணவனை வாழ வைத்து விட்டு, இப்போது மனைவியை இழந்து நிக்கும் மாமனார, எப்போ நீ நல்ல மன சோட அப்பான்னு நினைக்கிறீயோ அப்போ என்னைக் கூப்பிடு, சாப்பாடே சாப்பிட்டுட்டு போறேன்.'' சரியா... கம்பீரமாக நடந்து செல்லும் தன் சம்பந்தியை, வாஞ்சையுடன் பார்த்தார் ராம நாதன்...

மருமகள்களே... உங்கள் கணவனை பெற்ற மாமனாரும் அப்பாதானே...

# வசந்தி கேட்ட கேள்வி!

"மிஸஸ் வசந்தி ! கங்கிராட்ஸ் ! நீங்க அம்மா வாகப் போறீங்க.."

டாக்டர் சொன்னதும் பெஞ்ச்மீது படுத்திருந்த வசந்தி சந்தோஷப் படப்படப்போடுஎழுந்து உட கார்ந்தாள். இதுநாள்வரை அவள் மனத்தில் அடைத்துக்கொண்டிருந்த வேதனை சட்டென விலகிப்போனது.

" தேங்க் யு டாக்டர் !" டாக்டர் கையைப்பற்றிய வாறு நெகிழ்ச்சியுடன் கூறினாள்.

"இட்ஸ் ஓ.கே. !" என்ற டாக்டர் இருக்கையில் அமர்ந்துகொண்டிருந்த வசந்தியின் மாமியார் கமலத்திடம் விஷயம் கூற, கேட்ட கமலம் பூரிப்ப டைந்தார்.

"ரொம்ப நன்றி டாக்டர் ! ஒரு வருஷமா ரெண்டு வருஷமா, ஆறுவரு ஷமா வேதனைப்பட்டுக் கிட்டிருந்தா வசந்தி. ஏதோ பகவான் இப்போதா வது கண் திறந்தானே !"

"வசந்தி கொஞ்சம் வீக்கா இருக்காங்க.வைட்ட மின் மாத்திரையும் டானிக்கும் எழுதித்தரேன். வேளை தவறாமல் சாப்பிடட்டும். ரெண்டு மாதம் கழித்து செக்கப்புக்கு வந்தால் போதும் !

டாக்டர் எழுதிக்கொடுத்த மாத்திரை மற்றும் டானிக்கும் வாங்கிக்கொண்டு இருவரும் புறப் பட்டனர்.

மலடி மலடி என்று வையகம் பேசுகிற தோ இல்லையோ நிச்சயம் அக்கம்ப க்கத்தினர் பேசவே செய்தனர். அரசல் புரசலாக இது காதில் விழ துடித்துப் போனாள் வசந்தி. வசந்தி நிலைமை கண்டு விசனமுற்றார் கமலம். ஊர் பேசுவதை அசட்டை செய்யும்படி ம ரு ம க ளி ட ம் கூறினார் கமலம்.

நல்லவேளையாக நல்ல அருமை யானமாமியார் கிடைத்தார். சொந்த மகளைப்போல் தன் உள்ளம் கையில் தாங்கும் இவரைப்போல் வேறு ஒரு வர் கிடைப்பதுகஷ்டம் என எண்ணி மனத்துக்குள் சமாதானமடைவாள் வசந்தி.

வீட்டை அடைந்ததும் பெங்களூரு டூர் சென்றி ருக்கும் கணவனை மொபைலில் தொடர்பு கொண்டாள் வசந்தி.

"என்னங்க ! உங்களுக்கொரு சந்தோஷமான சமாச்சாரம்ங்க !"

"இதோபார். நான் மீட்டிங்குல இருக்கேன். சட்டுப் புட்டுன்னு விஷயம் என்னன்னு சொல்லித் தொலை !" மறுமுனையில் கணவன் மகேஷ் சிடு சிடுத்தான்.

வசந்தியின் ஆர்வம் குன்றிப்போனது.

விஷயம் என்னன்னு ஆவலாகஇல்லாமல் இப்படி கோபப் படுகிறானே என வேதனையுற்றாள்.

மெல்ல வாய்திறந்தாள். "கொஞ்சநேரம் முன் னால நாள் தள்ளிப்போயிருக்குன்னு டாக்டர் கிட்ட செக்கப்புக்கு போயிருந்தேன். நான் உண்டாகியி ருக்கறதா டாக்டர் கன்ஃபர்ம்டா சொன் னாங்க. நீங்க அப்பா ஆகப்போற விஷயத்தை உங்களுக்கு உடனே சொல்லணும்னு ஆசை. அதனால தாங்க போன் பண்ணினேன்."

மறுமுனையில் சில வினாடிகள் மௌனம் பிறகு வாய் திறந்தான் மகேஷ்.

":ஓ.கே.சந்தோஷம்.





மற்றத நாளைக்கு நான் வீடு திரும்பின உடனே பேசிக்கலாம்." தொடர்பை மகேஷ் துண்டித்துவிட துவண்டு போனாள் வசந்தி.

'சே! எவ்வளவு பெரிய உன்னதமான விஷயம்! ஒரு ரியாக்ஷனும் இல்லா மல் தன் புருஷன் இருக்கிறானே என கோபம் கொண்டாள் வசந்தி.

ஆனால் மகேஷின் திட்டமே வேறு! தாய்மைப் பேறு அடையாமலிருக்கும் வசந்தியைத் தள்ளி வைத்துவிட்டு வேறு ஒருத்தியை கட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை! சமயம் பார்த்து இதைச் சாதித்து விடத் துடித்தான். ஆனால் இப்பொழுதுதன் செயலுக்கு ஒரு முட்டுக்கட்டை போடும்படியாக வசந்தி செய்து விட்டது பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது மகேஷுக்கு.

மறுநாள்இரவு வீடு வந்து சேர்ந்தான் மகேஷ். அவன் வருவதற்கு முன்னாடியே கமலம் டின்னரை முடித்துக் கொண்டு படுக்கச் சென்றார்.

மகேஷும் வெளியிலேயே டிஃபனை முடித்துக் கொண்டதால் டிரெஸ் மாற்றி கை கால் அலம்பிக்கொண்டு அறைக்குள்புகுந்தான். அவன் பின்னாடியே வசந்தியும் சென்றாள்.

கட்டிலில் படுத்துக்கொண்ட புருஷன் எதிரில் போய் நின்றாள்வசந்தி. கோபத்துடன் முறைத்தாள்.

"என்னங்க! நேத்து நான் பேசின போது நீங்க பிடி கொடுத்து பேசல்ல. சரி. இன்னிக்காவது பேசுவீங்கன்னு நெனைச்சேன். ஆனா எதுவும் பேசாம இப்படி வந்து படுத்தால் என்ன அர்த்தம்?



நான் கன்ஸீவ் ஆனது உங்களுக்கு விருப்பமில் லையா சொல்லுங்க!" குரலில் ஆக்ரோஷம் வழிந்தோடியது !

"இதோபாரு ! எதுக்கு நீ இப்படி ஆர்ப்பாட்டம் பண்றே?" என்றவன் தொடர்ந்தான். "நீ கல்யாண மாகி மறுவருஷமோ இல்லஅதுக்கடுத்த வருஷமோ கன்ஸீவ் ஆகியிருந்தால் தேவலை. அது இரட்டிப்பு சந்தோஷமா இருந்திருக்கும். ஆனால் ஆறுவரு ஷம் கழிச்சு இவ்வளவு லேட்டா கன்ஸீவ்ஆகியிருக்கே. இதுல என்ன பெருமைவேண்டிக்கிடக்கு...சொல்லு !"

"ஓஹோ !"ஆறுவருஷம் கழிச்சு கன்ஸீவ் ஆனால் சந்தோஷமோ இல்லை பெருமையோப் படக்கூடாதா....சரி. நான் ஒரு கேள்வி கேட்குறேன். "

மகேஷ் விறைப்புடன் பார்த்துக் கொண்டிருக்க வசந்தி தொடர்ந்தாள்.

"தாமதத்துக்கு நான் மட்டும்தான் காரணமா?"

சுரீரென்று சவுக்கடிகளாக வார்த்தைகள்வந்து தாக்க விருட்டென்று எழுந்து உட்கார்ந்தான் மகேஷ். அவனுக்குள் ஒரு பெரிய ரசாயன மாற்றமே நிகழ்ந்தது!

"ஸாரிங்க! என்னை மன்னிச்சிடுங்க. உங்களை குத்திக் காட்டணும்னு என்னுடைய நோக்கம் கிடையாது. நிலையை புரிஞ்சுக்கிட்டு நடந்துக்குங்கன்னு சொல்ல வரேன்." என கூறிவிட்டு பக்கத்தில் சென்று படுத்துக்கொண்டாள் வசந்தி.

– வி.கே.லக்ஷ்மிநாராயணன்
போரூர், சென்னை

# தந்தையின் மகள்

பெண் பார்க்க வந்திருந்த மாப்பிள்ளை வீட்டார் வெளியேறியதும் சுகந்தியைச் சுற்றி அமர்ந்தனர் அவளுடைய அம்மா, தங்கை மற்றும் அண்ணன் ரகு.

"த பாரு சுகந்தி... எங்க எல்லோருக்கும் மாப் பிள்ளை லட்சுமணனை ரொம்பப் பிடிச்சி ருக்கு!... அதே மாதிரி அவர் வீட்டு சைடிலேயும் எல்லோருக்கும் முழு திருப்தி!... நீ மட்டும் ஓ.கே. சொல்லிட்டேன்னா... அடுத்த முகூர்த்தத்திலேயே "டும்.... டும்"தான்" என்றான் ரகு.

அதேநேரம் உள் அறையில் தனியே அமர்ந் திருந்த சுகந்தியின் தந்தை ராகவன் முகத்தில் இனம் புரியாத இறுக்கம்.

"சொல்லு சுகந்தி... உன் மனசுல இருக் கிறதைச்... சொல்லு!... "யெஸ்.. ஆர்... நோ"... சொல்லு!" சுகந்தியின் தங்கை லலிதா கேட்டாள்.

சுகந்தியிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

"ஏய் என்னடி ஆச்சு உனக்கு?... உன் கூடப் பொறந்த அண்ணனும்... தங்கையும் எவ்வளவு ஆசையா கேக்குறாங்க?... சொல்லுடி... உன்னோட பதிலை!" தாயார் கற்பகமும் கடுப்படித்தாள்.


உள் அறையில் அமர்ந்திருந்த ராகவன் ஒரு நெடிய பெருமூச்சை நிதானமாக வெளியிட்டார்.


"சுகந்தி... நீ அமைதியா இருக்கிறதைப் பார்த்தா எனக்கு வேற மாதிரிச் சந்தேகம் வருது"என்றான் ரகு.

"ஆமாம்டி எனக்கும்தான்... வேற எவனை யாச்சும் காதலிச்சு தொலைச்சிட்டியோ? ன்னு சந்தேகமாயிருக்கு" என்றாள் தாயார் கற்பகமும்.

தாயின் அந்த வார்த்தைகள் சுகந்தியின் சுயத் தைச் சுட்டு விட எல்லோரையும் கையமர்த்தியபடி, "எனக்கு இந்த மாப் பிள்ளை வேண்டாம்!" என்றாள்.

"ஏன்... ஏன்... என்ன... என்ன குறைச்சல்?... ஆளும் நன்றாகத்தான் இருக்கிறார்... கவர் மெண்ட் சம்பளக் காரர்





வேற !..." படபடத்தாள் கற்பகம்.

"எந்தக் குறைச்சலும் இல்லை... எல்லாம் ஓ.கே. தான் ஆனா....." சுகந்தி இழுத்தாள்.

"என்னடி?... ஆனா?... ஆவன்னா?".

"மாப்பிள்ளை கவர்மெண்ட் சம்பளக்காரர் மட்டுமில்லை. சரியான கிம்பளக்காரரும் கூட"

"அது எப்படிடி உனக்குத் தெரியும்?".

"விசாரிச்சிட்டேனே... என்னோட வாழ்க்கையே அவர்கையில் ஒப்படைக்கப் போறேன்... அப்படியிருக்கும்போது அவரைப் பற்றிவிசாரிக்காமல் இருப்பேனா?... நல்லாவே விசாரிச்சுட்டு நல்லாவே விசாரிச்சிட்டேன் !... சரியான கிம்பளக்காராம் !... ரெண்டு கையிலும் வாங்குவாராம்"

"சரி... அதிலென்ன தப்பு?... இப்பல்லாம் சம்பளத்தை மட்டும் நம்பிக்கிட்டிருந்தா குடும்ப வண்டி ஓட்ட முடியாதுடி !... கொஞ்சம் கிம்பளமும் வந்தால்தான் குடும்பம் நடத்த சரியா இருக்கும் !" என்றாள் கற்பகம்.

"அதுக்கு பதிலா பிச்சை எடுக்கலா மே?" சுகந்தி "வெடுக்" கென்று சொல்ல.

உள் அறையில் நிமிர்ந்து அமர்ந்தார் ராகவன்.



"அம்மா முப்பத்தியாறு வருஷமாக கவர்மெண்ட் உத்தியோகத்திலிருந்து... பத்து பைசா கூட லஞ்சம் வாங்காம.... ரிடையர்ட் ஆன.... ராகவன் சாரோட மகள் நான் !... உயிரே போனாலும் ஒரு லஞ்சப்பிரபுவுக்கு கழுத்தை நீட்ட மாட்டேன்"

உள் அறையிலிருந்து வேகமாய் வந்த ராகவன், நேரே சுகந்தியிடம் சென்று, அவள் கைகளைப் பற்றிக் கொண்டு தழுதழுத்தார்.

"எனக்கு அவனைப் பற்றி ஏற்கெனவே தெரியும்மா... ஒரு லஞ்சப் பேர்வழிக்கு மகனை கட்டிக் கொடுப்பதில் எனக்குத் துளியும் விருப்பமில்லை !... நான் அதைச் சொன்னால் இந்த குடும்பத்தில் இருக்கிற எல்லோரும் என்னை எதிரி மாதிரி பார்ப்பாங்க !... திட்டித் தீர்ப்பாங்க !...ன்னுபயந்து... தர்ம சங்கடத்தில் உட்கார்ந்திருந் தேன் !... என்னை காப்பாத்திட்டியம் மா.... என் மகள்ன்னு நிரூபிச்சிட்டேம்மா"

மற்றவர்கள் முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து நகர, அதைப்பற்றி தந்தையும் மகளும் துளியும் கவலைப்படாமல் நின்றனர்.

– முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# பிரியாத வரம் வேண்டும்

பிரியத்தை கேட்டால்
பிரிவை மட்டுமே தருகிறாயே ?
உனக்கொன்று தெரியுமா ?
இப்பிரபஞ்சத்தில்
உயிரற்று கிடக்கும்
ஒரு சிறு துரும்பு கூட
உன் நினைவுகளை

தூசி தட்டி விட்டு தான் செல்கிறது .
என் கற்பனைகள்
கஞ்சத்தனமின்றி
கட்டுக்கடங்காமல்
உன்னை சுற்றியே வலம் வருகின்றது.
காதல் வாழ்க்கையின்
ஒரு பக்கமாம்

யார் சொன்னது?
என் வாழ்க்கை பக்கங்கள் எல்லாம்
நீயே நிறைந்திருக்கிறாய்
உன்னை சந்தித்து
பின்னர் சிந்தித்து
என்றும்
நொந்து கொண்டது எல்லாம் போதுமடி

வரம் நீ
சாபம் ஏனடி
எனக்கு பரிசாக தந்தாய்?
அந்த கருணையுள்ள
கடவுளிடம்
நேருக்கு நேராய்
உரக்கச் சொல்கிறேன்

கண்ணை மூடி
தவமிருக்க வேண்டுமா?
பட்டினி கிடந்து
விரதமிருக்க வேண்டுமா?
கை நரம்புகளை கிழித்து கொண்டு
இரத்த அபிஷேகம்
செய்ய வேண்டுமா?

அவளுக்காக
எதையும் செய்வேன்
அவளை இழப்பதை தவிர

இன்னொரு ஜென்மமாவது
அவள் பிரியத்தை
பிரியாத வரம் கொடு இறைவா!
நீ ஈவு ,இரக்கமுள்ளவன் என்று
என் கல்லறையின் மேல்
இறுதி சாசனம்
எழுதி விட்டுச் செல்கிறேன்.

– நௌஷாத் கான். லி



அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்

## அருள்தரும் தெய்வம்

இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

## பரிசை அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்

## PADMA MEDIA HOUSE

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்

அலைபேசி எண்: 9337501889

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com












எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,

உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,

**Whatsup no.8122664699**

TamilnaduEpaper.com